மலர்-4 இதழ்-73 செப்டம்பர் 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர் mobile app

GET IT ON Google Play

இலவச e- magazine

www.aanmeegamalar.com

e- magazine



# சிவ ஐக்கியத்திற்கு உதவும் லிங்கோத்பவ காலம்

# மகாவிஷ்ணுவை எந்நேரம் எப்படி நினைக்கலாம்



1. மருந்தை உட்கொள்ளும் பொழுது, அவனை நினைத்தால் விஷ்ணு,
2. உணவை உட்கொள்ளும் பொழுது அவனை நினைத்தால் ஜனார்த்தனன்,
3. படுக்கச் செல்லும் பொழுது அவனை நினைத்தால் பத்மநாபன்,
4. திருமணத்தின் பொழுது அவனை நினைத்தால் பிரஜாபதி,
5. யுத்தம் செய்யும் பொழுது அவனை நினைத்தால் சக்ரதாரி,
6. வெளியில் கிளம்பும் பொழுது அவனை நினைத்தால் திரிவிக்ரமன்,
7. நண்பனாய் அவனைப் பார்க்கும் பொழுது ஸ்ரீ தரன்,
8. கெட்ட கனவு காணும் பொழுது அவனை நினைத்தால் கோவிந்தன்,
9. கஷ்டம் வரும் போது, அவனை அழைத்தால் மதுசூதனன்,
10. காடுகளில் செல்லும் பொழுது நரசிம்மனாக தம்மை அண்டியவர்களைக் காப்பவன்,
11. நெருப்பால் துன்பம் வரும் பொழுது, அவனை நினைத்தால் அவனே ஸ்ரீ மகாவிஷ்ணு,
12. தண்ணீரால் துன்பம் ஏற்படும் பொழுது அவனை நினைத்தால் அவனே ஸ்ரீ வராகன்,
13. ஆபத்தான மலையின் மீது ஏறும் சமயத்தில் அவன் நாமத்தை நினைக்கும் பொழுது அவனே ஸ்ரீ ராமன்,
14. நடக்கும் பொழுது உள்ளத்தால் அவன் பாதம் பற்றினால் அவனே வாமனன்,
15. இறக்கும் தருவாயில் அவன் நமக்கு நாராயணன்,
16. எல்லாச் சமயங்களிலும் பக்தனுக்கு அருள ஒடோடி வருவதில் அவன் மாதவன்.

# நாள் முழுக்க மன நிம்மதியும், நினைத்த காரியம் கைகூட



அந்த காலத்தில் பெரியவர்கள் காலையில் எழுந்ததும் ஒரு மந்திரத்தை கூறுவார்கள். அப்படி கூறுவதால் அந்த நாள் முழுக்க அவர்களுக்கு மன நிம்மதியும், நினைத்த காரியம் கைகூடுவது போன்ற பல நல்ல விஷயங்களும் நடக்கும்.

மந்திரம்:

'ஸமுத்ர வசனே தேவி பர்வத ஸ்தன மண்டலே
விஷ்ணு பத்னி நமஸ்துப்யம் பாத ஸ்பர்சம் க்ஷமஸ்வமே..'

"ப்ராதஸ்மரனம்" என்று கூறப்படும் இந்த மந்திரத்தின் பொருள் யாதெனில் சமுத்திரத்தை ஆடையாக உடுத்திய நிலமகளே, எனது பாதங்களை உன் மீது வைத்து நான் இன்று எழுகிறேன். அதை தயை கூர்ந்து பொறுத்துக்கொண்டு எனக்கு அருள்புரியுங்கள் என்பதே இதன் பொருள்.

இந்த மந்திரத்தை தினமும் காலை எழுந்தவுடன் பாதங்கள் தரையில் படுவதற்கு முன்பு கூற வேண்டும்.





# சிறு துன்பங்களை கொடு கண்ணா



மகாபாரத போரில் வெற்றி பெற்ற தர்மர் பட்டம் சூட்டிக் கொண்டார். பாண்டவர்களின் தாயான குந்தியிடம் விடைபெற கிருஷ்ணர் வந்தார்.

குந்தி அவரிடம் "எங்களை விட்டுச் செல்கிறாயே! இனி உன்னை காணும் பாக்கியம் இல்லாமல் போய் விடுமே" என வருந்தினாள்.

"கவலை வேண்டாம். விரும்பும் வரம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்" என்றார் கிருஷ்ணர்.

அதற்கு குந்தி "கிருஷ்ணா! தினமும் வாழ்வில் சிறு துன்பமாவது நேரும் வரம் கொடு" என்றாள்.

"எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும் என்று தானே கேட்பார்கள். நீங்கள் மாறாக கேட்கிறீர்களே!" என்றார் கிருஷ்ணர்.

"கிருஷ்ணா! இன்பம் வந்தால் கடவுளின் நினைவு வருவதில்லை. துன்பப்படும் போது தான் வருகிறது. உன்னை தினமும் நினைக்க வேண்டும் என்பதால் இப்படி கேட்டேன்" என்றாள் குந்தி.

# விளக்கு ஏற்றினால் தோஷம் உண்டாகும்...

## அசைவம் சமைத்தால், வீட்டில்

அசைவம் சமைத்தால், வீட்டில் கண்டிப்பாக விளக்கு ஏற்றக்கூடாது. அதுபோல அசைவம் சாப்பிட்டுவிட்டு கோவிலுக்கு செல்வது கூட மகாபாவம்.

மேலும் இதில் கவனிக்க வேண்டியது, பொதுவாக அசைவம் சாப்பிடும் சமயத்தில் வீடு முழுவதும் துர்வாசனை வீசும். அதனால் நல்ல சக்திகள் வீட்டிற்கு வராது,

அல்லது வர முடியாமல் வெளியில் நிற்கும் என்பது சாஸ்திர நம்பிக்கை.

தோஷம் உண்டாகும்:

பொதுவாகவே வீட்டில் விளக்கு ஏற்றினால் நல்ல தெய்வ சக்திகளை வா என்று அழைப்பதற்கான சமிஞ்சை.

அசைவம் சமைத்து வைத்த வீட்டில் விளக்கு ஏற்றினால் நாம் நல்ல சக்திகளை வா என்று அழைத்து விட்டு, உடனுக்குடன் அவமானப்படுத்தியதற்கு சமமாகும்.

இந்தப் பாவத்தால் நமக்கு பிரம்மஹத்தி தோஷத்திற்கு நிகரான தோஷம் ஏற்படும்.

இதன் காரணமாக பொருளாதாரம் பெரும் அளவில் பாதிக்கப்படும்.

அதனால் வீட்டில் அசைவம் சமைத்த அடுத்த நாள் காலையில் வீட்டில் வீட்டை கழுவி துர்வாசனை வராத அளவிற்கு சுத்தம் செய்து, குளித்து விட்டு ஊதுபத்தி போன்றவற்றை ஏற்றி வீட்டை நல்ல வாசனைகளுக்கு உள்ளாக்கி அதன் பிறகு விளக்கு ஏற்றினால் லக்ஷ்மி கடாட்சம் வரும்.

வீட்டை கழுவும் சமயத்தில் மஞ்சள் அல்லது கல் உப்பை தண்ணீரில் போட்டு துடைத்து சுத்தம் செய்யலாம்.



# பிள்ளையார் எறும்பின் வரலாறு

முப்பத்து முக்கோடி தேவர்கள் முதல் ஓரறிவு கொண்ட உயிரினங்கள் வரை எல்லா ஜீவன்களுக்கும் படியளப்பவர் பரமேஸ்வரன். இதை அறியாதவளா பார்வதிதேவி. ஆனாலும் அவளுக்கு, 'இந்தத் தொழிலை ஈசன் சரிவர கவனிக்கிறாரா?' என்றொரு சந்தேகம். அதற்குத் தீர்வு காண முனைந்தாள்.

சிறு பாத்திரம் ஒன்றை எடுத்து வந்து அதற்குள் கறுப்பு எறும்புகள் சிலவற்றைப் பிடித்துப் போட்டு மூடி விட்டாள். 'இந்த எறும்புகளுக்கு ஈசன் எப்படி உணவு அளிக்கிறார், பார்க்கலாம்!' என்பது அவளது எண்ணம். மறு நாள், "ஸ்வாமி, நேற்று எல்லா ஜீவராசிகளுக்கும் படியளந்தீர்களா?" என்று ஈசனிடம் கேட்டாள்.

'உலகநாயகி தன்னோடு விளையாடுகிறாள்!' என்பது ஈசனுக்குப் புரிந்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "இதிலென்ன சந்தேகம் பாத்திரத்தில் நீ சிறை வைத்த எறும்புகளைப் பார்த்திருந்தால், இந்தக் கேள்விக்கே இடம் இருந்திருக்காது!" என்றார்.



பார்வதிதேவி, ஓடோடிச் சென்று பாத்திரத்தைத் திறந்து பார்த்தாள்! சுறுசுறுப்புடன் சுற்றிக் கொண்டிருந்தன எறும்புகள். அத்துடன் சில அன்னப் பருக்கைகளும் கிடந்தன. 'ச்சே வீணாக ஸ்வாமியை சந்தேகப்பட்டு விட்டோமே!' என வருந்தினாள் தேவி.

"மகேஸ்வரி உனது ஐயம் விலகியதா?" குறும்பாகக் கேட்ட பரமேஸ்வரன், "சரி, சரி விநாயகன் உன்னைத் தேடிக் கொண்டிருந்தான் போய்ப்பார்!" என்றார்.

விநாயகரைச் சந்தித்த பார்வதிதேவிஅதிர்ந்து போனாள். ஒட்டிய வயிறும் வாடிய முகத்துடனும் இருந்தார் கணபதி!

"ஏனம்மா அப்படிப் பார்க்கிறீர்கள். எல்லாவற்றுக்கும் தாங்கள்தான் காரணம்!" என்றார் விநாயகர்.

"என்னச் சொல்கிறாய் நீ?" படபடப்புடன் கேட்டாள் பார்வதிதேவி.

"அன்னையே அகிலம் ஆளும் நாயகனின் நித்திய தர்மபரிபாலனத்தில் சந்தேகம் கொண்டது தாங்கள் செய்த முதல் தவறு. அடுத்தது, அப்பாவி எறும்புகளை பட்டினி போடும் விதம் சிறையிட்டது! தாயின் பழி தனயனைத் தானே சாரும். எனவே, எறும்புகளின் பசியை நான் ஏற்றுக் கொண்டு தாங்கள் எனக்களித்த அன்னத்தை, எறும்புகளுக்கு இட்டேன். பட்டினி கிடந்ததால், எனது வயிறு சிறுத்துப் போனது!" விளக்கி முடித்தார் விநாயகர்.

பார்வதிதேவி கண் கலங்கினாள். விநாயகரை அழைத்துக் கொண்டு சிவனாரிடம் சென்றவள், "ஸ்வாமி, என்னை மன்னியுங்கள். நான் செய்த தவறுக்கு நம் மகனை வதைக்க வேண்டாம்!" என்று வேண்டினாள்.



"வருந்தாதே தேவி! பக்தர்கள் என்பால் வைக்கும் நம்பிக்கை, சற்றும் குறைவில்லாததாக இருக்க வேண்டும். அந்த நம்பிக்கைக்கு இணையான பூஜையோ வழிபாடோ கிடையாது. இதை, உலக மக்களுக்கு உணர்த்த நடந்த திருவிளையாடலே இது. அன்னபூரணியான நீ, உன் பிள்ளைக்கு அன்னம் அளித்தாய். அவன், அதை எறும்புகளுக்கு வழங்கினான். விநாயகனின் பெருமையைப் போற்றும் வகையில், அவை இனி பிள்ளையார் எறும்புகள் என்றே அழைக்கப்படட்டும்!" என்று அருளினார்.

பிறகு பார்வதியிடம், "எறும்பு உண்டது போக, மீதம் உள்ள அன்னப் பருக்கைகளை விநாயகனுக்குக் கொடு!" என்றார். அப்படியே செய்தாள் பார்வதி. அந்த பருக்கைகளை உண்ட விநாயகரின் வயிறு பழைய நிலைக்குத் திரும்பியது. அவரது பசியும் தீர்ந்தது.

இந்த அருளாடல் சம்பவம், தேய்பிறை சதுர்த்தி திதி நாளில் நிகழ்ந்தது. இதையே சங்கடஹர சதுர்த்தி நாளாக அனுஷ்டித்து விநாயகரை வழிபடுகிறோம் என்று கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு. யாருக்கும் துன்பம் கொடுக்காதவர்கள் உயர்ந்தவர்கள் அல்லவா?.. எறும்பு என்றாலே கடிக்கும் சுபாவம் கொண் டது. ஆனால், இந்த கறுப்பு எறும்பு மட்டும் யாரையும் கடிப்பதில்லை. அதனால் சுவாமி எறும்பு என்று குறிப்பிடுகிறோம்.



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்

# திதி சூன்யத்தை போக்கி வாழ்வை வளமாக்கும் நித்ய தேவதைகள்



நாம் பூமியிலிருந்து பார்க்கும் போது, அமாவாசை அன்று சூரியனும் சந்திரனும் ஒன்றாக இருப்பது போலவும், அதன்பின் நாள்தோறும் சந்திரன் சூரியனை விட்டு விலகி வருவது போலவும், சூரியனுக்கு நேர் எதிரே விலகி வந்த நாள் பௌர்ணமியாகவும், மீண்டும், பௌர்ணமி முதல், சந்திரன் நாளுக்கு நாள் சூரியனை நோக்கி நெருங்கி வருவது போலவும், இருவரும் நெருங்கி இணையும் போது அமாவாசை எனவும் ஒரு தோற்றமளிக்கிறது.

இந்த விலகல் மற்றும் நெருக்கத்தை, ராசிகட்டத்திலும் நம் முன்னோர்கள் அமைத்து, அதை வரைந்து காட்டியிருக்கிறார்கள்.

கோசரப்படி சந்திரன் ராசிக் கட்டத்தில் ஒவ் வொரு கட்டமாக சூரியனைவிட்டு விலகி வந்து, பின் மீண்டும் நெருங்கி வந்து ஒன்று சேரும். இப்படி ஏற்படும் விலகல், நெருக்கங்களால் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையே உருவாகும் இடைவெளியை "திதி" என்னும் அளவால் அளந்திருக் கிறார்கள். ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வொரு பெயரை சூட்டியுமிருக்கிறார்கள்.

ஒரு குழந்தைக்காக ஜெனன ஜாதகம் எழுதும்போது, திதி பற்றிய விரிவான தகவல்களை தினசுத்தி பகுதியில் எழுதுவ துண்டு.

ஒரு குழந்தை பிறந்தபோது நடப்பில் இருந்த ஒரு திதியால், சில ராசிகள் சூன்யம் அடைவதாக ஜோதிட சாஸ்த்திரங்களில் சொல்லப் பட்டுள்ளன. சூன்யம் என்றால் வெறுமை என்றும்,ஒன்றுமே இல்லாதது என்றும் பொருள். இதை திதிசூன்யம் என்று ஜோதிடர்கள் குறிப்பிடு கிறார்கள். சூன்யமடையும் ராசியை சூன்யராசி என்றும், அந்த ராசிக்குடைய கிரகத்தை சூன்ய கிரகம் என்றும், குறிப்பிடுகிறார்கள். எனவே திதிசூன்யத்தோடு தொடர்புடையவை ராசியும், அந்த ராசிக்குரிய கிரகமும் ஆகும். திதிசூன்ய பலன் பார்க்கும்போது, சூன்யராசி எதுவென்றும், அதன் அதிபதியாகிய கிரகம் எத்வென்று மட்டுமே பார்த்து, அதற்குரிய பலன் அறியவேண்டும்.

திதி சூனியத்தை நீக்கி வெற்றி தரும் திதி நித்யா தேவதைகள்.

அவரவர்கள் பிறந்த திதி, அதற்குரிய திதி நித்யா தேவியை அந்த திதி நாளில் ஸ்ரீ லலிதம்பிகையுடன் ஸ்ரீசக்ரம் வைத்து (ஒரு வருடம்) மூல மந்திரம் சொல்லி வணங்கி,

திதி சூனியத்தை நீக்கி வெற்றி தருமாறு சங்கல்பம் செய்து வர, திதி சூனியம் நீக்கி வாழ்வில் வெற்றி மேல் வெற்றி வந்து சேரும்.

அனைத்து சக்கரங்களின் தாய் சக்கரம் எனப்படும் ஸ்ரீசக்கரத்தில் 43 முக்கோணங்களில் மைய முக்கோணத்தில் வீற்றிருக்கும்

15 தேவியர் தான் இந்த திதி நித்யா.

1. ஸ்ரீ காமேஸ்வரி நித்யா
2. பகமாலினி நித்யா
3. நித்யக்லின்னை நித்யா
4. பேருண்டா நித்யா
5. வந்நிவாசினி நித்யா
6. மஹாவஜ்ரேஸ்வரி நித்யா
7. சிவதூதி நித்யா
8. த்வரிதா நித்யா
9. குலசுந்தரி நித்யா
10. நித்ய நித்யா
11. நீலபதாகா நித்யா
12. விஜயா நித்யா
13. ஸர்வமங்களா நித்யா
14. ஜ்வாலாமாலினி நித்யா
15. சித்ராதேவி நித்யா

உங்களுக்குரிய திக்குரிய நித்யாவை அடை யாளம் காண எளிமையான வழிமுறை தந்துள் ளோம்.

## நீங்கள் பிறந்த திதியும் திதிக்குரிய நித்யாவும்

வளர்பிறை ப்ரதமை திதிக்கும் தேய்பிறை அமாவாசை திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ காமேச்வரி நித்யா**

வளர்பிறை த்விதியை திதிக்கும் தேய்பிறை சதுர்த்தசி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ பகமாலினி நித்யா**

வளர்பிறை த்ருதியை திதிக்கும் தேய்பிறை த்ரயோதசி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ நித்யக் லின்னா நித்யா**

வளர்பிறை சதுர்த்தி திதிக்கும் தேய்பிறை த்வாதசி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ பேருண்டா நித்யா**

வளர்பிறை பஞ்சமி திதிக்கும் தேய்பிறை ஏகாதசி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ வஹ்நி வாஸினி நித்யா**

வளர்பிறை சஷ்டி திதிக்கும் தேய்பிறை தசமி திதிக்கும் அதிதேவதை
**மகா ஸ்ரீ வஜ்ரேச்வரி நித்யா**

வளர்பிறை சப்தமி திதிக்கும் தேய்பிறை நவமி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ சிவதூதி நித்யா**

வளர்பிறை அஷ்டமி திதிக்கும் தேய்பிறை அஷ்டமி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ த்வரிதா நித்யா**

வளர்பிறை நவமி திதிக்கும் தேய்பிறை சப்தமி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ லஸுந்தரி நித்யா**

வளர்பிறை தசமி திதிக்கும் தேய்பிறை சஷ்டி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ நித்யா நித்யா**

வளர்பிறை ஏகாதசி திதிக்கும் தேய்பிறை பஞ் சமி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ நீலபதாகா நித்யா**

வளர்பிறை த்வாதசி திதிக்கும் தேய்பிறை சதுர்த்தி திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ விஜயா நித்யா**

வளர்பிறை த்ரயோதசி திதிக்கும் தேய்பிறை த்ருதியை திதிக்கும் அதிதேவதை
**ஸ்ரீ ஸர்வ மங்களா நித்யா**

வளர்பிறை சதுர்த்தசி திதிக்கும் தேய்பிறை த்விதியை திதிக்கும் அதிதேவதை **ஸ்ரீ ஜ்வாலா மாலினி நித்யா**

வளர்பிறை பவுர்ணமி திதிக்கும் தேய்பிறை ப்ரதமை திதிக்கும் அதிதேவதை ஸ்ரீ சித்ரா நித்யா

## 15 தித் நித்யா தேவதைகளின் காயத்ரி மந்திரங்கள்:

**காமேச்வரி நித்யா**
ஓம் காமேஸ்வர்யை வித்மஹே
நித்யக்லிந்நாய தீமஹி
தன்னோ நித்யஹ் ப்ரசோதயாத்

**பகமாலினி நித்யா**
ஓம் பகமாளிணி வித்மஹே
சர்வ வசங்கர்யை தீமஹி
தன்னோ நித்ய ப்ரசோதயாத்

**பேருண்ட நித்யா**
ஓம் பேருண்டாயை வித்மஹே
விஷஹராயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்

**வஹ்னி வாஸினி நித்யா**
ஓம் வஹ்னி வாஸின்யை வித்மஹே
ஸித்திப்ரதாயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்

**மஹா வஜ்ரேஸ்வரி நித்யா**
ஓம் மஹா வஜ்ரேஸ்வராய வித்மஹே
வஜ்ரநித்யாய தீமஹி
தன்னோ நித்ய ப்ரசோதயாத்

**சிவதூதி நித்யா**
ஓம் சிவதூத்யை ச வித்மஹே
சிவங்கர்யைச தீமஹி
தன்னோ நித்யஹ் ப்ரசோதயாத்

**துவரிதா நித்யா**
ஓம் த்வரிதாயை வித்மஹே
மஹாநித்யாய தீமஹி
தன்னோ தேவீ ப்ரசோதயாத்

**குலசுந்தரி நித்யா**
ஓம் குலசுந்தர்யை வித்மஹே
காமேஸ்வர்யை தீமஹி
தன்னோ நித்ய ப்ரசோதயாத்

**நித்ய நித்யா**
ஓம் நித்யபைரவ்யை வித்மஹே
நித்யநித்யாயை தீமஹி
தன்னோ யோகினீ ப்ரசோதயாத்

**நீலபதாகை நித்யா**
ஓம் நீலபதாகை வித்மஹே
மஹாநித்யாயை தீமஹி
தன்னோ நித்ய ப்ரசோதயாத்

**விஜயா நித்யா**
ஓம் விஜயதேவ்யை வித்மஹே
மஹாநித்யாய தீமஹி
தன்னோ நித்ய ப்ரசோதயாத்

**சர்வமங்களா நித்யா**
ஓம் சர்வமங்களை வித்மஹே
மஹாச் சந்த்ரத்மிகயை தீமஹி
தன்னோ நித்ய ப்ரசோதயாத்

**ஜ்வாலாமாலினி நித்யா**
ஓம் ஜ்வாலாமாலினி வித்மஹே
மஹா ஜ்வாலாயை தீமஹி
தன்னோ நித்ய
ப்ரசோதயாத்

**சித்ரா நித்யா**
ஓம் ஸ்ரீசிசித்ராயை ச
வித்மஹே
மஹாநித்யை ச தீமஹி
தன்னோ நித்ய ப்ர
சோதயாத்





ஆன்மிக மாதமிருமுறை இதழ்

# இலவச இதழ்

ஆன்மிகமலர் மெயில் புக்








உங்களது மொபைல் போனில் படிக்க....

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
ஆன்மிகமலர் இ-புத்தகம் படிக்கலாம்.

ஆன்மிகமலர் .காம்

# பன்னிரண்டு ராசிக்காரர்கள் வழிபட வேண்டிய விநாயகர்

அவரவர் ராசிக்குரிய விநாயகப்பெருமானின் மூர்த்தங்களை வழிபட்டால் சிறப்பு. 12 ராசிக்காரர்கள் வழிபட வேண்டிய விநாயகர்

**மேஷம்:** செவ்வாயின் ஆதிக்கத்தைப் பெற்ற நீங்கள் இயற்கையில் வீரம் மிக்க வர்கள். எவருக்கும் அஞ்சாதவர்கள். மனதிற்கு சரியென்று பட்ட விஷயத்தை எவர் தடுத்தாலும் விடாது தைரியத்துடன் செயல்படுத்துபவர்கள். மனோ தைரியம் மிக்க நீங்கள் வழிபட வேண்டியவர் வீர கணபதி

**ரிஷபம்:** சுக்கிரனின் ஆதிக்கத்தைப் பெற்ற நீங்கள் அம்பிகையின் பரிபூர்ண அரு ளுக்குப் பாத்திரமானவர்கள். 12 ராசிகளில் சந்திரன் உச்சம் பெற்ற நிலையில் இருப்பது உங்களுடைய ஜாதகத்தில் மட்டுமே. இயற்கையில் ராஜயோகத்தைப் பெற்ற நீங்கள் வழிபட வேண்டியவர் ராஜராஜேஸ்வரியின் அம்சத்தில் உள்ள ஸ்ரீவித்யா கணபதி

**மிதுனம்:** பல்வேறு திறமையை உடைய நீங்கள் கண் திருஷ்டி தோஷத்தால் அடிக்கடி அவதிப்பட நேரிடும். உங்களின் திறமையும், வளர்ச்சியும் அடுத்தவர் மனதில் போட்டி, பொறாமையை வளர்க்கலாம். எதிரிகளைப் பற்றி நீங்கள் அதிகம் கவலைப்படுவதில்லை என்றாலும், மறைமுகமாக வந்து சேருகின்ற தாக்குதல்களிலிருந்து விடுபட நீங்கள் வழிபட வேண்டியவர் லட்சுமி கணபதி

**கடகம்:** பல்கலை வித்தகர்களான நீங்கள் பன்முகம் கொண்டவர்கள். அபார ஞானமும், அசாத்தியமான ஞாபக சக்தியும் கொண்ட நீங்கள் அமைதியான முறையில் அடுத்தவர்களை வழிநடத்தும் திறன் மிக்கவர்கள். ஒரு நேரம் சாந்தம், ஒரு நேரம் கோபம் என முகத்தில் நவரசத்தையும் காட்டும் நீங்கள் வழிபட வேண்டியவர் ஹேரம்ப கணபதி

**சிம்மம்:** இயற்கையில் தைரிய குணம் மிக்க உங்களுக்கு என்றுமே வெற்றித்திருமகள் துணை நிற்பாள். 12 ராசிகளில் தலைமை குணத்தினை உடைய உங்களுக்கு என்றுமே தன்னம்பிக்கை குறையவே குறையாது. அசாத்தியமான மன வலிமையுடன் என்றென்றும் வெற்றியினை ருசித்து வரும் நீங்கள் வழிபட வேண்டியவர் விஜய கணபதி

**கன்னி:** இயற்கையில் பெண்மை குணத்தினை உடைய நீங்கள் சரியான துணையுடன் செயல்படும் காரியங்களில் வெற்றி காண்பவர்கள். உங்களின் வாழ்க்கைத்துணையுடன் இணைந்து செயல்படும்போது உங்களை வெல்ல எவராலும் இயலாது. உங்களின் வழிபாட்டிற்குரியவர் மோகன கணபதி

**துலாம்:** அயராத உழைப்பினை உடைய நீங்கள்,மேற்கொண்ட லட்சியத்தினை அடையும் வரை ஓய மாட்டீர்கள். ஒரு லட்சியத்தில் வெற்றி பெற்றாலும் நிறைவு கொள்ளாது, அடுத்த லட்சியத்தை நாடி செல்பவர்கள். வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வானமே எல்லை என்று செயல்பட்டு வரும் உங்களின் வழிபாட்டிற்கு உரியவர் க்ஷிப்ர ப்ரஸாத கணபதி.

**விருச்சிகம்:** இயற்கையில் மிகவும் சுறுசுறுப்பான குணத்தினை உடைய நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்திருக்காது சதா பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் நினைத்த மாத்திரத்தில் காரியத்தை செய்துமுடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தினைக் கொண்டவர்கள். எப்போதும் பரபரப்புடன் இயங்கி வரும் நீங்கள் வழிபட வேண்டியவர் சக்தி கணபதி



**தனுசு:** குரு பகவானின் ஆதிக்கத்தைப் பெற்ற நீங்கள் நேர்மையை மிகவும் நேசிப்பவர்கள். நேர் வழியைத் தவிர குறுக்குவழியில் செல்ல விருப்பமில்லாதவர்கள். தர்ம நெறியில் செல்வதால் அடிக்கடி தர்மசங்கடத்தை சந்தித்து வரும் உங்களுக்கு வழிபாட்டிற்கு உகந்தவர் சங்கடஹர கணபதி

**மகரம்:** சனிபகவானின் ஆதிக்கத்தினைப் பெற்ற நீங்கள் தியாக உள்ளம் கொண்டவர்கள். அளவான ஆசை கொண்டவர்கள். விட்டுக் கொடுத்துச் செல்லும் மனப்பான்மையினால் ஒருசில இழப்பினை சந்திப்பவர்கள். இதனால் அடிக்கடி மனக் குழப்பத்திற்கு ஆளாகும் நீங்கள் மனதினை அடக்கி ஆள கற்றுக் கொண்டீர்களேயானால் வெற்றி நிச்சயம். நீங்கள் வழிபட வேண்டியவர் யோக கணபதி

**கும்பம்:** அனுபவ அறிவின் மூலமாக அடுத்தவர்களை அடக்கி ஆள நினைப்பவர்கள் நீங்கள். தான் அறிந்திராத விஷயத்தையும் கூட தனக்குத் தெரியாது என்று வெளிக்காண்பிக்காமல் செயல்படுவீர்கள். அதேநேரத்தில் அவற்றை அறிந்து கொள்வதிலும் ஆர்வம் செலுத்துபவர்கள். புதிய விஷயங்களையும் எளிதில் கற்றுக்கொண்டு தனித்திறமை மூலம் முன்னேறி வரும் நீங்கள் வழிபட வேண்டியவர் சித்தி கணபதி

**மீனம்:** இயற்கையில் கள்ளம், கபடம் இல்லாத குழந்தைத்தனமான குணத்தினை உடையவர்கள் நீங்கள். அடுத்தவர்களிடம் எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் எல்லோரும் நல்லவரே என்ற எண்ணத்துடன் பழகி வருவீர்கள். சூது, வாது தெரியாத நீங்கள், தான் நினைத்ததை அடைந்துவிட வேண்டும் என்ற பிடிவாத குணத்தினை உடையவர்கள். உங்களுடைய வழிபாட்டிற்கு உரியவர் பால கணபதி





www.aanmeegamalar.com

# விநாயகர்

## அறிய வேண்டிய அற்புத தகவல்கள்

எந்த காரியத்தை தொடங்குவதற்கு முன்னும் விநாயகர் வழிபாடு சிறந்த பலனை தரும். விநாயகர் பற்றிய அரிய குறிப்புகளை தெரிந்து கொள்ளலாம்.

❖ விநாயகர் ஒரு கொம்பு, இரு காதுகள், மூன்று கண்கள், நான்கு தோள்கள், ஐந்து கைகள் ஆறெழுத்துக்கள் உடையவர்.

❖ விநாயகர் பூதமாய், தேவராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், உயர்திணையாய், அக்திணையாய் எல்லாமாய் விளங்குகிறார்.

❖ யானையை அடக்கும் கருவிகள் பாசமும் அங்குச மும், விநாயகர் தன் கையில் பாசாங்குசத்தை ஏந்தி இருக்கின்றார். தன்னை அடக்குவார் ஒருவரும் இலர் என்ற குறிப்பை இதன் மூலம் உணர்த்துகிறார்.

❖ அகில உலகங்களும் விநாயகருடைய மணி வயிற்றில் அடங்கிக் கிடப்ப என்ற குறிப்பை அவருடைய மத்தள வயிறு புலப் படுத்துகின்றது.

❖ விநாயகர் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞான சக்தி என்ற மும்மதங்களைப் பொழிகின்றார்.

❖ கும்பம் ஏந்திய கை படைக்கும் தொழிலையும், மோதகம் ஏந்தியகை காத்தல் தொழிலையும், அங்குசம் ஏந்திய கரம் அழித்தல் தொழிலையும், பாசம் ஏந்திய கரம் மறைத்தல் தொழிலையும், தந்தம் ஏந்திய கரம் அருளல் தொழிலையும் புரிகின்றன. எனவே விநாயகர், சிருஷ்டி, திதி, சங்காரம், திரௌபவம், அனுக்கிரகம் என்ற ஐம்பெருந் தொழில்களை ஐந்து கரங்களால் புரிந்து ஆன்மாக்களுக்கும் அருள் புரிகின்றார்.

❖ விநாயகர் தாய் தந்தையரை அன்புடன் வழிபட்டதால் பிள்ளை என்ற பெயருடன் ஆர் என்ற பன்மை விகுதி பெற்றுப் பிள்ளையார் என்று பேர் பெற்றார்.

❖ முருகர், அம்பிக்கை ராமர், கிருஷ்ணர் முதலிய உருவங்கள் சிற்ப முறைப்படி செய்து வழிபட வேண்டி யவை. அவை சிற்ப லட்சணத்திற்கு மாறுபட்டிருந்தால் வழிபாடு செய்பவருக்கு நன்மை கிடைக்காது. ஆனால் பிள்ளையார் உருவம் அப்படி அல்ல. மஞ்சளை அரைத்து ஒரு சிறு குழந்தை கூட பிடித்து வைத்தால் போதும் பிள்ளையார் தயார். பிள்ளையார் அவ் வடிவில் எழுந் தருளி அருள்புரிவார்.

❖ சந்தனம், களி மண், மஞ்சள், சாணம் இப்படி எளிதாகக் கிடைக்க கூடிய பொருளில் விநாய கரை செய்து வழிபடுவார்கள்.

❖ விநாயகருக்கு எளிதாக கிடைக்கக் கூடிய அருகம்புல் மிக விருப்பம். அருகு வைத்து விநாயகரை வழிபட்டால் பிறவிப் பிணி நீங்கி, இன்பம் பெருகும்.

❖ விநாயகருக்கு கரும்பு, அவரை, பழங்கள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், பச்சரிசி, பிட்டு, வெள்ளரிப்பழம், கிழங்கு, அன்னம், கடலை முதலியன வைத்து நிவேதனம் செய்ய வேண்டும்.

❖ விநாயக சதுர்த்தி அன்று நாம் பூஜை செய்யும் விநாயகர் சிலை மண்ணினால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். நம் கட்டை விரல் அளவைப் போல பன்னிரண்டு மடங்கு அளவில் இருக்க வேண்டும்.

❖ புரட்டாசி மாத சதுர்த்தி வரை நம் இல்லத்துப் பூஜையில் இருக்க வேண்டும். இந்த 30 நாட்கள் தினந்தோறும் பூஜைகளை முறையாகச் செய்து வருவதுடன் நைவேத்தி யங்களும் செய்ய வேண்டும். புரட்டாசி சதுர்த் திக்கு மறுநாள் பூஜை முடிந்து சிலையை நதியிலோ, குளத்திலோ, கடலிலோ அல்லது ஏதாவது நீர்நிலைகளிலோ சேர்த்து விட வேண்டும்.

❖ பார்வதி தேவியே கடைப்பிடித்து வழிகாட்டிய விரதம் இது. இந்த சதுர்த்தி பூஜையைச் செய்து தான் பார்வதி தேவி ஈசுவரனைக் கணவராக அடைந்தார்.

❖ ராஜா கர்த்தமன், நளன், சந்திராங்கதன், முருகன், மன்மதன் (உருவம்பெற்றான்), ஆதிசேஷன், தட்சன் மற்றும் பலர் விநாயக சதுர்த்தி விரதத்தைக் கடைப்பித்து உயர்ந்த நிலை அடைந்தனர்.



- விநாயகர் பக்தர்களில் தலைசிறந்தவர் புருசுண்டி முனிவர். விநாயகரை நோக்கித் தவமிருந்து விநாயகரை நேரே தரிசனம் செய்தவர்.
- தேவேந்திரனுடைய விமானம் சங்கடஹர சதுர்த்தி விரதப் பலனா லேயே மீண்டும் விண்ணில் பறக்க ஆரம்பித்தது.
- கிருத வீர்யன் இந்த விரதத்தின் பலனால் உத்தமமான குழந் தைச் செல்வமடைந்தான்.
- சூரசேனன் என்னும் மன்னன் விநாயகர் விரதத்தைத் தான் கடைப்பிடித்ததோடு தன் நாட்டு மக்கள் அனை வரும் இதைக் கடைப்பிடிக்கும்படி செய்து சகல செல்வங் களையும் பெற்றான்.
- திண்டிவனம்திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையில் 12 கி.மீ. மேற்கே அமைந்துள்ள கிராமம் தீவனூர். அந்த கிரா மத்தில் உள்ள பொய்யாமொழிப் பிள்ளையார் கோவிலில் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு முதல் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும் என்பது அங்குள்ளவர்களின் நம்பிக்கை.
- சாணம், புற்றுமண், மஞ்சள், வெல்லம், எருக்கம் வேர், சந்தனம் ஆகியவற்றில் பிள்ளையார் உருவம் செய்து வழிபட்டால் அனைத்துவிதமான நலன்களும் பெற்று மோட்சம் அடைவர் என்று விநாயக புராணம் கூறுகின்றது.
- தும்பைப்பூ, செம்பருத்தி மலர், சங்கு புஷ்பம், எருக்கம்பூ, மா விலை, அருகம்புல், வில்வ இலை ஆகியவை விநாயகரை அர்ச்சனை செய்யவும் மாலையாக அணிவிக்கவும் மிகவும் உகந்தவையாக கருதப்படுகிறது.
- கிருதயுகத்தில் தேஜஸ்வி என்ற பெயரில் சிம்மவாகனத்திலும் த்ரேதா யுகத்தில் மயில் வாகனத்திலும், துவாபர யுகத்தில் மூஞ்சுறு வாகனத்திலும் கலியுகத்தில் எலி வாகனத்திலும் விநாயகர் தோன்றியுள்ளார்.
- வாஞ்ச கல்ப கணபதி தியானம் மூலமந்திரத்தை சிரமப்பட்டு மனதில் ஏற்றிக் கொண்டு முறைப்படி ஜபித்து வந்தால் உங்கள் வாழ்வில் பொருள் சேர்க்கை, பெரியோர் நட்பு, செல்வ நிலை உயர்வு கிட்டுவது உறுதி. குரு உபதேசம் பெற்று படித்தால் கூடுதல் பலன்கள் கிடைக்கும்.
- ஈஸ்வரனுக்கும் உமையம்மைக்கும் இடையே ஸ்கந்த வடிவம் இருப்பின் அந்த வடிவத்தை ''சோமாஸ்கந்த வடிவம்'' என்றும் இடையில் விநாயகர் வடிவம் இருந்தால் இது கஜமுக அனுக்ரஹ வடிவம் எனவும் புராணங்கள் தெரிவிக்கின்றன.
- வட இந்தியாவில் விநாயகர் தன்னுடைய திருக்கரங்களில் முள்ளங்கியை வைத்து உண்கிறார். தென் இந்தியாவில் தன் கரங் களில் மோதகத்தை வைத்துக் கொண்டு ருசி பார்க்கிறார்.
- திருஷ்டிகளை விரட்டுகிற விநாயகர் யந்திரத்தை செப்புத் தகட்டில் வரைந்து விநாயக சதுர்த்தி அன்று பூஜை செய்து, பிரதி சதுர்த்தி அன்றும் வழிபட்டு வர கண் திருஷ்டி நெருங்காது, வீட்டு வாசலில் சட்டமிட்டு மாட்டலாம்.
- கணபதி மந்திரங்களை பிரம்ம முகூர்த்த வேளை என்ப்படும் அதிகாலை 4.30 முதல் 6.00க்குள் உச்சரிப்பது மிகவும் நல்லது என கணேச உத்தர தாயினி உபநிஷத்தில் கூறப் பட்டுள்ளது.
- விநாயகரை தேய்பிறை சதுர்த்திதோறும் வழிபடுவது சங்கடகர சதுர்த்தி என்று வழங்கப்படும். அதுவும் அந்நாளில் வன்னி மரத்தடியில் வழிபடுவது மிக நன்று.
- பிள்ளையார் 15 பெண்களை திருமணம் செய்து கொண்டதாக புராணம் சொல்கிறது. வடக்கு இந்திய புராணங்களில் இக்குறிப்பு காணப்படுகிறது. அந்த 15 தர்மபத்தினிகள் சித்தி, புத்தி, வல்லமை, மோதை, பிரமோதை, சுமதை, சுந்தரி, மனோரமம், மங்கலை, கேசினி, சாந்தை, சாருகாசை, சுமத்திரை, நந்தினி, காமதை.
- ஜப்பான் நாட்டில் வயது முதிர்ந்த ஆணும் பெண்ணும் ஆரத்தழுவிக் கொண்டிருப்பதை போல உருவம் கொண்ட விநாயகர் சிலைகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இந்த இரு விநாயகர்களையும் வழிபட்டால் நீண்ட காலங்கள் வாழலாம் என்று நம்புகின்றனர்.
- ஒவ்வொரு சதுர்த்தியன்றும் விநாயகர் கோவிலுக்கு சென்று எட்டுக் கொழுக்கட்டை செய்து தானமளித்தால் வறுமைகள் நீங்கி வளம் பெருகும்.
- சாத்தூர் அருகே உள்ள போத்திரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள கட்ட விநாயகர் கோவி லில் தீப்பெட்டி செய்வோர் ஒவ் வொருவரும் தினம் ஒரு தீக்குச்சி வீதம் கொளுத்தி வழிபாடு செய் வார்கள். எரித்த குச்சியை வீட்டில் சேமித்து வைப்பார்கள். விபத்து நேராமல் இவ்விநாயகர் துணை செய்வார் என்பது நம்பிக்கை. நன்னிலத்திற்கு அருகேயுள்ள திருப்பனையூர் என்ற சிவதலத்தில் எழுந்தருளியுள்ள இந்தக் கணபதியை வழிபட்டால் நீங்கள் இறங்கும் பெருஞ் செயலில் உங்களுக்குத் துணையாக இந்தக் கணபதி விளங்குவார்.
- முதன் முதலாக விநாயகருக்கு கொழுக் கட்டை படைத்து வழிபட்ட வர் யார் என்று தெரி யுமா? வசிஷ்டரின் மனைவியான அருந்ததி.
- சுவாமிமலையில் கொங்கு நாட்டு பிறவிக் குருடனுக்கு கண்பார்வை வழங்கி அருள்புரிந்த கண் கொடுத்த விநாயகர் உள்ளார். கண்களில் ஏற்படும் நோய்கள் நீங்க இவரை வழிபடலாம்.



- வன்னி மரத்தடியில் இருக்கும் விநாயகரை மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திர நாட்களில் வழிபாடு செய்து அன்றைய தினம் ஒன்பது கன்னிப் பெண் களுக்கு அன்னதானம், வஸ்திர தானம் அளித்து வந்தால் மாங்கல்ய தோஷம் அகலும், திருமணத்தடையும் நீங்கும்.
- நடனமிடும் தோற்றத்தில் உள்ள நர்த்தன விநாயகருக்கு அபிஷேகம் செய்வித்து இனிப்பு நைவேத்யம் வைத்து வழிபட்டு வந்தால் இழந்தவற்றைப் பெறலாம்.
- அஸ்வினி அல்லது மூலம் நட்சத்திரத்தில் சிவசக்தி விநாயகர் உள்ள ஆலயத்துக்குச் சென்று அலங்காரம் செய்விப்பதுடன் வெள்ளை, நீலம், சிவப்பு மூன்று நிறங்களும் கலந்த வஸ்திரத்தை விநாயகருக்கு அணிவித்து மூன்று வித நைவேத்யங்களாக இனிப்பு, உறைப்பு மற்றும் மோதகத்தை அர்ப்பணித்து வழிபட்டு வந்தால் உத்தி யோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம் வந்து சேரும்.
- கேது திசை நடக்கையில் அதற்குரிய ஏழு ஆண்டுகளிலும் ஆன்மீக நாட்டம் அதிகரிக்குமாம். அச்சமயங்களில் கேதுவுக்கு உரிய தெய்வமாக விளங்கும் விநாயகப் பெருமானை வழிபட்டு வந்தால் துன்பங்களில் துவளாமல் இன்பமாக அதைக் கடக்கலாம். கேது ஒருவருடைய சுய ஜாதகத்தில் எந்த வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து அந்த திசை நோக்கி இருக்கும் விநாயகரைத் தேர்ந்தெடுத்து வழிபட்டால் இன்னும் சிறப்பான பலன்களைப் பெறலாம்.
- குழந்தைப் பேறுக்குத் தயாராக இருப்பவர்கள் வல்லபை கணபதிக்கு நைவேத்தியங்கள் படைத்து நல்ல குழந்தையைத் தர

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

வேண்டும் என்று வழிபட்டால் அதன்படி நடக்குமாம். சுவாமி மலையில் முருகன் சந்நிதானத்தில் வல்லபை கணபதியைக் காணலாம்.

- திருவள்ளூர் மாவட்டம் திருப்பாச்சூரில் உள்ள சிவன் கோவிலில் ‘விநாயகர் சபை’ உள்ளது. இத்தகைய சபை தமிழ்நாட்டில் எந்த ஒரு ஆலயத்திலும் இல்லை.
- நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி அருகே கன்னடியன் கால்வாய் ஓரத்தில் மிளகு பிள்ளையார் உள்ளார். இவர் மீது மிளகை அரைத்து பூசி வழிபட்டால் மழை கொட்டோ கொட்டு என்று கொட்டுமாம்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளைப் பெற்றவர்கள் அவர்களுக்குள் சண்டைகள் வராமல் இருக்க விநாயகரை வேண்டிக் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.
- இலையினால் விநாயகரை அர்ச்சனை செய்தாலோ, அல்லது வன்னி விநாயகரை சுற்றி வந்து வழிபட்டாலோ தீவினைகள் விலகும் என்பது ஐதீகம்.
- வில்வம், வேம்பு, அரசு, மந்தாரை, அத்தி, அரை நெல்லி, நாவல், வாகை ஆகிய ஒன்பது விருட்சகங்களுடன் விநாயகர் காட்சி தருவது அபூர்வம், பொதுவாக மேற்குரிய மரங்கள் எல்லாம் மருத்துவக்குணம் வாய்ந்தவை. புத்திரப் பேறுக்காக இம்மரங்களை சுற்றி வந்து வணங்குவது நல்லது.
- பிள்ளையார், சூரியன், அம்பிகை, விஷ்ணு, சிவன் என்று ஐம்பெரும் தெய்வங் களையும் ஒரே நேரத்தில் ஒரே பீடத் தில் வைத்து பூஜை செய்வதற்கு கணபதி பஞ் சாயதனம் என்பர். இதில் விநாயகப் பெருமானை ஐந்து மூர்த்திகளில் நடுவில் வைத்து வழிபட வேண்டும்.
- தேரெழுந்தூரில் உள்ள விநாயகர் திருஞான சம்பந்தருக்கு சிவாலயத்தின் வழி காட்டிய தால் இப்பெயரோடு விளக்குகின்றார்.
- வெள்ளை எருக்கம் வேரால் விநாயகரை பத்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் செய்து அவருடைய மூல மந்திரத்தால் வழிபட்டு வந்தால் சகல பலனும் கிடைக்கும் என்று ஸ்ரீ பவிஷ்ய புராணம் கூறுகிறது.
- அடியார்களின் தரித்திரத்தை நீக்கி ஆயுளை யும், செல்வத்தையும், உடற்சுகத்தையும் அருள்பவர் ரண மோட்சக்கணபதி ஆவார்.
- ‘வி’ என்றால் இதற்கு மேல் இல்லை எனப் பொருள். நாயகர் என்றால் தலைவர் எனப் பொருள். இவருக்கு மேல் பெரியவர் யாருமில்லை என்று பொருள்பட விநாயகர் என்று பெயரிடப்பட்டது.
- கணபதி எனும் சொல்லில் ‘க’ என்பது ஞானத்தை குறிக்கிறது. ‘ண’ என்பது ஜீவர்களின் மோட்சத்தை குறிக்கிறது. ‘பதி’ என்னும் பதம் தலைவன் எனப் பொருள்படுகிறது.
- விநாயகருக்கு விநாயகி, வைநாயகி, வின்கேஸ்வரி, கணேசினி, கணேஸ்வரி ஐங்கினி எனும் பெண்பால் சிறப்பு பெயர்களும் உண்டு. இந்து மதத்தில் மட்டுமல்ல, பௌத்த, சமண சமயத்தவர் களாலும் சிறப்பாக வழிபடும் சிறப்பும் இவருக்குண்டு.







# ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் குரு பெயர்ச்சி விழா தொடர் யாகம்

வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில், பீடாதிபதி முரளிதர ஸ்வாமிகளின் 59 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு கோடி ஜப யாகம் 28.08.2019 முதல் 03.11.2019 வரை நடைபெற உள்ளது.

மஹா சுதர்சன – தன்வந்திரி – திருஷ்டி துர்கா ஹோமத்துடன் தொடர் யாகம் துவங்கியது.

வேலூர் மாவட்டம் வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் ஸ்வாமிகளின் 59 ஆவது ஜெயந்தி விழா, ஸ்ரீ தன்வந்திரி ஜெயந்தி விழா, குரு பெயர்ச்சி விழா என முப்பெரும் விழாவை முன்னிட்டு இன்று 28.03.2019 அன்று காலை 8.00 மணியளவில் கோபூஜை, புண்ணியகவாசனம், யாகசாலை பூஜை, வேத பாராயணம், மங்கள வாதியத்துடன் ஸ்ரீ மஹா சுதர்சன – தன்வந்திரி – திருஷ்டி துர்கா கோடி ஜப ஹோமம் துவங்கியது. இந்த யாகம் வருகிற 03.11.2019 வரை நடைபெற உள்ளது.

இந்த யாகத்தில் தொழிலதிபர் திரு. கீ.ஸி.மஹேந்திரவர்மன், வாலாஜா காவல்துறை ஆய்வாளர் திரு. பாலு, இராணிபேட்டை சரக தீ அணைப்பு துறை அலுவளர் திரு. மஹேந்திரன், மலேஷிய பக்தர்கள் திரு. சரவணன், திரு. பாஸ்கரன், வாலாஜா தொலை தொடர்பு துறை அதிகாரி திருமதி. கஜலக்ஷ்மி, வாலாஜா வி.ஷி. ஸ்க்ரீன்ஸ் திரு. சேதுராமன், கீழ்புதுபேட்டை திரு. தேவராஜ சாமியார் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்த யாகத்தில் ஸ்ரீ தன்வந்திரிக்குரிய விசேஷ திரவியங்கள் சேர்க்கப்பட்டன. வருகை புரிந்த பக்தர்களுக்கு பீடாதிபதி முரளிதர ஸ்வாமிகள் அருளாசிகளை வழங்கி மஞ்சள் பிரசாதம் வழங்கினார். தொடர் யாகத்தில் பக்தர்கள் கலந்து கொண்டு யாக பலனை பெறலாம்.

– மேலும் விபரங்களுக்கு:
Sri Danvantri Arogya Peedam,
போன்: 04172–230033, 09443330203,



# Ozone Layer-யும் நம்முன்னோர் கடமைகளும்

ஒசோன் மண்டலத்திற்கும் நம் முன்னோர் களுக்கும் என்ன சம்மந்தம், எதற்காக ஒசோனுடன் நம் முன்னோர்களை ஒப்பிட வேண்டும் என்றால், பூமிக்கு எப்படி ஒசோனோ அதை போல் தான் நமக்கு நம் முன்னோர்கள்.

இன்னும் புரியும்படி சொல்லவேண்டும் என் றால் OZONE LAYER எனப்படுவது பூமியின் பாதுகாப்பு கவசம் தற்காப்புகவசம், ஏன் வடிக்கட்டி என்று கூட சொல்லலாம் (Filter layer) பூமிக்கு பூமியின் வெளிபுரத்தில் இருந்து ஏதேனும் பூமியை நோக்கி வந்தால் அதில் இருக்கும் நல்லதை மட்டும் பூமியில் வந்து படும்படி செய்துவிட்டு, கெடுதல்களை தடுத்து விடும்.

Ex: சூரியனில் இருந்து இரு வகையாக கதிர்கள் வெளிப்படும் ஒன்று "அகச்சிகப்பு கதிர்கள்" மற்றும் "புறஊதாக் கதிர்கள்" இதில், அகச்சிகப்பு கதிர்களால் பூமிக்கு எந்த வித ஆபத்தும் இல்லை, ஆனால் புற ஊதாக் கதிர்கள் பூமியில் வந்து விழுந்தால், பூமியில் உள்ள எந்த உயிரினமும் மகிழ்ச்சியாக வாழமுடியாது.

ஆகையால் தான் Ozone எனப்படும் தற்காப்பு மண்டலம் புறஊதாக்கதிர்களை தடுத்து வெறும் அகச்சிகப்பு கதிர்களை மட்டும் பூமியில் விழ வைக்கிறது.

அதை போல் தான் நம் முன்னோர்களும், நமக்கு வெளியில் இருந்து ஏதேனும் ஆற்றல் நம்மை நோக்கி வந்தால் அதில் உள்ள கெட்டதை தடுத்து, நல்லதை மட்டும் நமக்கு வாங்கி தருவார்கள்.

ஒரு தற்காப்புகவசம் போல் பாதுகாப்பு கவசம் போல் நம்மை பாதுகாத்து நமக்கு தேவையானவற்றை தந்து நமக்கு தேவையில்லாதையும் ஆபத்தான விசயத்தையும் தடுத்து, தற்காப்பதுதான் அவர்களின் வேலை.

Ex:ஒருவர் நம்மை வாழ்த்துகிறார் என்றால், அந்த வாழ்த்தின் மூலம் கிடைக்கும் நன்மையை நமக்கு வாங்கி கொடுப்பதும், ஒருவர் நம்மை தூற்றுகிறார் என்றால், அந்த தூற்றுதல் மூலம் கிடைக்கும் தீமை நம்மை வந்து அடையாமல் தடுப்பதும் தான் நம் முன்னோர்களின் வேலை. (filter layer) அதாவது Negative-energy யை வடிகட்டி விட்டு Positive-energyயை தருவது.

முன்னோர்கள் எனப்படுவது நமக்கு முன் வாழ்ந்து இறந்த நம் #மூதாதையர்கள் மற்றும் நம் குலதெய்வம்.

பூமிக்கு இவ்வளவு நன்மை செய்யும் Ozone யின் அருமை இந்த பூமியில் வாழும் மக்களுக்கு தெரிவதில்லை, ஆகையால் தான் Ozoneயை சிதைக்கும் செயல்களையே செய்கின்றனர். (Burning plastic using refrigerator etc...) இதனால் ஆபத்து என்பது பூமிக்கு தான்.

இதை போல் தான், நாமும் நம் முன்னோர் களின் அருமை புரியாமல் முன்னோர்களுக்கு செய்யும் கடமையான "திதி கொடுத் தல்", "படையல் போட்டு வணங்குதல்", "குலதெய்வ கோவிலுக்கு செல்லுதல்" போன்றவற்றை செய்யாமல் இருக்கிறோம் இதனால் பாதிப்பு என்னமோ நமக்கு தான். பூமி வளமுடன் இருக்க எப்படி Ozone மண்டலம் தேவைபடுகிறதோ அதை போல் நாமும் வளமுடனும் நலமுடனும் வாழ நம் முன்னோர்களின் தொடர்பு தேவைப்படுகிறது.

Ozone மண்டலத்தை சேதப்படுத்துவதும் நம் முன்னோர்களுடன் நமக்கு உண்டான தொடர்பை இழப்பதும் நம்தலையில் நாமே மண்வாரி போடுவதற்கு சமம்.

Ozone யில் உள்ள ஓட்டையை அடைப்பது எவ்வளவு முக்கியமோ அதை போல் தான் நமக்கும் நம் முன்னோர்களுக்குமான தொடர்பை பலப்படுத்துவதும் முக்கியம்.Ozone யில் உள்ள ஓட்டையை அடைக்க பல வழிகள் உண்டு ஆனால் நமக்கும் நம் முன்னோர்களுக்குமான உறவை பலப்படுத்த அவர்களை #வணங்குவது தான் ஒரே வழி...

– கோகுல மணிகண்டன் சான்றார்
தொடர்பு எண்: 09677359474





ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mo-bile app) டவுன்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ்

GET IT ON Google Play

# உங்கள் ராசிக்குரிய நோய்களும், அவற்றை தடுக்கும் வழிகளும்

நன்மை தீமைகள் என்பது மனித குலம் அவசியம் அனுபவித்து ஆக வேண்டும் என்பது இயற்கையின் நியதி, இந்த நியதியால் மனிதர்கள் பல்வேறு வகையான அனுபவங்களை பெற்று, வாழ்க்கை என்றால் என்ன என்பதை கற்றுக்கொண்டு, மேன்மையடைந்து, முழுமையான மனிதர்களாகவேண்டும் என்பதே முக்கிய நோக்க மாகும்.

இந்த வகையில் ஒருசில தீர்வுகளையும் நம் முன்னோர் வழிவகுத்துள்ளனர். நமது ராசிப் பலன், ஜாதகப் பொருத்தம் போன்ற வற்றை பயன்படுத்தி எதிர்காலத்தில் வரும் பிரச்சனைகளை எளிதாக சமாளிக்க வழிமுறை களையும் வகுத்து வைத்துள்ளனர்.

அந்த வகை யில் ஒவ்வொரு ராசிக்கும் ஒருசில பொது வான உடல் நலப் பிரச்சனைகளை கண்டு, விளக்கி யுள்ளனர் நமது முன்னோர். அந்த வகையில் எந்த ராசிக்காரர்களுக்கு எந்த வித சிறு உபாதைகள் வரும் என்பதைபற்றி எளிதாக பார்ப்போம்.

## மேஷம்

தலைவலி மற்றும் மூக்கடைப்பால் கஷ்டப் படுவார்கள். இவர்கள் வாழைப்பழம், அத்திப்பழம், ப்ராக்கோலி, பீன்ஸ் போன்றவற்றை உட்கொண்டு வந்தால், அவஸ்தைப்பட்டு வரும் பிரச்சனை மாயமாக மறையும்.

## ரிஷபம்

வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனை, உப்புச்சத்தால் தான் ரிஷப ராசிக்காரர்கள் கஷ்டப்படுவார்கள். இந்த வயிறு பிரச்சனை சரிசெய்ய, பசலைக்கீரை, காய்கறி சாலட், கிரான்பெர்ரி மற்றும் பருப்பு வகைகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## மிதுனம்

அதிகமாக மன அழுத்தத்திற்கு உள்ளாவார் கள். மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த சிறந்த உணவுகளான பாதாம், மோர், கிரேப் ஃப்ரூட், அஸ்பாரகஸ் போன்றவற்றை உட்கொள்வதோடு, தண்ணீரை அதிகம் குடிக்க வேண்டும். இதனால் மன அழுத்தம் குறைவதோடு, இதய நோய்கள் வராமலும் தடுக்கும்.

## கடகம்

குறிப்பாக கலோரிகள் அதிகம் நிறைந்த தவறான உணவுகளைத் தான் உட் கொள்வார்கள். ஆனால் சரியான உணவு களான பெர்ரிப் பழங்கள், பச்சை காய்கறிகள், மீன் போன்றவற்றை டென் சனாக இருக்கும் தருணங்களில் உட் கொண்டால், வயிறும் நிறையும், உடல் ஆரோக்கியமும் மேம்படும், டென் சனும் குறையும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்கள்கொழுப்பு குறைவான உணவுகளை உட்கொள் வது, அவர்களை ஆரோக்கியமாகவும், ஃபிட்டாகவும் வைத்துக் கொள்ளும். அதிலும் சிம்ம ராசிக்காரர்கள் கடல் உணவுகள், எலுமிச்சை, தேங்காய், பீட்ரூட் போன்றவற்றை அதிகம் உட்கொள்வது நல்லது.

## கன்னி

செரிமான பிரச்சனைகளால் அதிகம் கஷ்டப் படுவார்கள். இந்த ராசிக்காரர்கள் நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுகளை உட்கொண்டு வந்தால், செரிமான பிரச்சனைகளில் இருந்து விடு படலாம். அதில் நார்ச்சத்துள்ள உணவுகளான ஓட்ஸ், வாழைப்பழம், பப்பாளி உட்கொள்வது நல்லது.

## துலாம்

பதப்படுத்தப்பட்ட உணவுகளையும், ஆல்க ஹலீல் அருந்துவதையும் கட்டாயம் குறைத்துக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு உணவுகளின் மீதுள்ள ஆசையால் அதிகம் உட்கொண்டு, பல பிரச்சனைகளை சந்திப்பார்கள். இந்த ராசிக்காரர்கள் பீட்ரூட், சோளம், கேரட், ஆப்பிள், உலர் திராட்சை போன்றவற்றை உட்கொள்வது நல்லது.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்கள் அதிகம் உணர்ச்சி வசப்படுவார்கள் மற்றும் நோய்த்தொற்றுகளால் கஷ்டப்படுவார்கள். இந்த ராசியைக் கொண்ட வர்கள், பால், தயிர், வால்நட்ஸ், பாதாம், அன்னாசி போன்றவற்றை அதிகம் சேர்த்து வந் தால், உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து நோய்த்தொற்றுகளில் இருந்து விடுபடலாம்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களின் உடலில் கொழுப்புக் கள் அதிகம் தேங்கும். குறிப்பாக இடுப்பிலும், தொடையிலும் தான் கொழுப்புக்கள் சேரும். இந்த ராசிக்காரர்கள் தானியங்கள், ஸ்கிம்டு மில்க், மீன், தயிர் போன்றவற்றை உணவில் சேர்ப்பது நல்லது.

## மகரம்

மகர ராசிக்காரர்கள் எலும்பு தொடர்பான பிரச்சனையை அதிகம் சந்திப்பார்கள். முட்டைக் கோஸ், பட்டாணி, உருளைக்கிழங்கு மற்றும் பசலைக்கீரை, ஓட்ஸ், பால் போன்றவற்றை அன்றாட உணவில் சேர்த்து வருவதன் மூலம் ஃபிட்டாகவும், ஆரோக்கியமாகவும் வாழலாம்.



## கும்பம்

கும்ப ராசிக்காரர்கள் உயர் இரத்த அழுத்தத்தால் கஷ்டப் படுவார்கள். இதனை தவிர்க்க பேரிக்காய், அத்திப்பழம், எலுமிச்சை, பேரிச்சம்பழம், மாதுளை போன்றவற்றை அதிகம் உட்கொள்ள வேண் டும்.

## மீனம்

மீன ராசிக்காரர்கள் சளி மற்றும் காய்ச்சலால் தான் கஷ்டப்படுவார்கள். இதனைத் தவிர்க்க வேண்டுமானால், மீன ராசிக்காரர்கள் சிக்கன், மட் டன், பீட்ரூட், சிட்ரஸ் பழங்கள் போன்ற வற்றை அதிகம் உட்கொள்ள வேண்டும்.

# நான்கு அடிப்படை சமய வழிமுறைகள்: சமய வழிமுறைகளுக்கான தேவை

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “நமது துன்பம், வேதனை மற்றும் குறைபாடுகளுக்கான அடிப்படைக் காரணம் ஆன்மாவை உடல் மற்றும் மனதுடன் அடையாளப் படுத்திக் கொள்வதே என்பதையும் மேலும் இந்த அடையாளப்படுத்துதலின் காரணமாகவே இன்பம் துன்பம் எனும் கிளர்ச்சியுற்ற நிலைகளை நாம் உணர்கிறோம். அத்துடன் பேரானந்த நிலை அல்லது இறை உணர்வுநிலையை பெரும்பாலும் அறியாதவர்களாக இருக்கிறோம். சமயமானது அடிப் படையில் அத்தகைய துன்பத்தை நிரந்தரமாகத் தவிர்த்தலிலும், தூய பேரானந்தம் அல்லது இறைவனை அடைதலிலும் உள்ளடங்கியுள்ளது என்பதையும் கூட குருதேவர் குறிப்பிட்டுக் கூறுகிறார்.”

“அசைந்து கொண்டிருக்கும் நீர்ப் பரப்பில் சூரியனின் தெளிவான பிரதிபிம்பம் காணப்பட முடியாதது போன்று, சர்வ வியாபக பரம் பொருளின் பிரதிபிம்பமாகிய ஆன்மாவின், உண்மையான பேரானந்த இயல்பானது, ஆன்மாவை, மாறிக் கொண்டிருக்கும் உடல் மற்றும் மனநிலைகளுடன் அடையாளப்படுத்துவதிலிருந்து எழுகின்ற அமைதியின்மை எனும் அலைகளின் காரணமாகப் புரிந்து கொள்ளப்பட முடியாதது. அசையும் நீர் சூரியனின் சரியான பிம்பத்தைச் சிதைப்பதுபோன்று அடையாளப்படுத்துவதின் வாயிலாக ஏற்படுகின்ற மன தின் அமைதியற்ற நிலை, ஆக ஆன்மாவின் உண்மையான என்றும் ஆனந்தமயமான இயல்பை உருமாற்றம் செய்கிறது. இந்த கருத்தின் நோக்கம், என்றும் ஆனந்தமயமான ஆன்மாவை, நிலையற்ற உடல் மற்றும் மனதுடனான அதன் கேடுவிளைவிக்கும் தொடர்பிலிருந்தும், அடையாளப்படுத்துவதிலிருந்தும் விடுவிப்பதற்கான மிகவும் எளிதான, பகுத்தறிவுக்கு மிகவும் பொருத்தமான, மிகவும் அடிப்படையான வழிமுறைகளை அனைவருக்குமான நடைமுறை வழிகளைவிவாதிப்பதாகும். அதனால் துன்பத்தை அது நிரந்தரமாகத் தவிர்த்து பேரானந்தத்தை எய்தும் சமயம் இதையே அடக்கியுள்ளது. எனவே ஆழ்ந்து கவனிக்க வேண்டிய அடிப்படை வழிமுறைகள் சமயம் சார்ந்தவையாகவும் சமய ரீதியான செயல்களை உள்ளடக்கியிருப்பவையாகவும் இருக்கின்றன. ஏனெனில் இவற்றின் வாயிலாகவே ஆன்மாவானது, உடல் மற்றும் மனதுடன் அடையாளம் காண்பதிலிருந்து விடுவிக்கப்பட்டு அதன் விளைவாக துன்பத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, நிரந்தரமான பேரானந்தம் அல்லது இறைவனை அடைவதற்கு ஏதுவாக முடியும். இந்து மறைநூல்களின் ஒரு சமஸ்கிருத ஈரடிச் செய்யுளில் எதிரொலிக்கின்றது. “நீங்கள் உடலின் எல்லைக்கப்பால் மேம்பட்டு பரம்பொருளாக உங்களையே உணர முடிந்தால், நீங்கள் சாசுவதமாக



ஆனந்த மயமானவராக. அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபட்டவராக இருப்பீர்கள்.”

குருதேவர் மேலும் அருளுகிறார்; “நான்கு அடிப்படையான உலகளாவிய சமய வழிமுறைகள் உள்ளன. அவை தினசரி வாழ்வில் கடைபிடித்தால் ஆன்மாவை, அதன் உடல் மற்றும் மன வாகனங்கள் எனும் தளைக்கட்டுக்களிலிருந்து தக்க சமயத்தில் விடுவிக்கும்.”

நான்கு அடிப்படை சமய வழிமுறைகள்

1. அறிவுசார்ந்த வழிமுறை
2. பக்திசார்ந்த வழிமுறை
3. தியான வழிமுறை
4. விஞ்ஞான வழிமுறை அல்லது யோகம்.

முதலில் அறிவு சார்ந்த வழிமுறையை பார்க்கலாம்.

## 1. அறிவுசார்ந்த வழிமுறை

“அறிவு சார்ந்த வழிமுறையானது, இலக்கை உணர்ந்தறிதலில் விரைவாகப் பயன் அளிக்காது. பொதுவாகப் பின்பற்றப்படுகின்ற இயற்கையான வழிமுறையாகும். அறிவுசார்ந்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் இயற்கையானதாகவும், அதன் காரணமாகப் பகுத்தறிவு வாய்ந்த உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானதாகவும் இருக்கிறது. நமது சுய உணர்வுபூர்வமான அறிவு, உணரக்கூடிய, ஆனால் சுயஉணர்வு இல்லாத கீழ்நிலை விலங்குகளிடமிருந்து நம்மை வேறுபடுத்துகிறது.”

“மனிதன் எண்ணச் செயல்முறைகளில் எவ்வளவு ஆழ்ந்து ஈடுபடுகிறானோ, அவ்வளவு அதிகமாக அவன் அந்த “வழிமுறையை” பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறான். பரிணாம செயல் முறையின் போக்கில் (அதாவது, உணர்வு நிலையானது, ஆன்ம உணர்வு நிலையாக மேம்படுகிற வழிமுறை) அவன் என்னவாக இருக்கிறானோ, அதை அடைந்திருக்கிறான். அத்துடன் அறிந்தோ அறியாமலோ பரம் பொருளை அவன் அவ்வளவு நெருக்கமாகவும் அணுகுகிறான். ஏனெனில் எண்ணத்தில் நாம் உட லுக்கு அப்பாற்பட்டு எழுகிறோம். இந்த வழிமுறையை கருத்தூன்றிப் பின்பற்றுவது நிச்சயமான பலன்களைக் கொணரும். இந்தியாவில், அறிவு சார்ந்த, வழிமுறை அதன் மிக உயர்ந்த வடிவில் ‘ஞான யோகம்’ என்றழைக்கப்படுகின்றது.

அதாவது, “நான் உடலல்ல. படைப்பினுடைய கடந்து செல்லும் காட்சி எனது ஆன்மாவை பாதிக்க முடியாது. நான் பரம்பொருள் “ என்று ஒருவர் தனக்கே இடைவிடாது நினைவூட்டிக்கொள்வதுபோன்று, நினைவுகூர்தல் மற்றும் பகுத்தறிதல் வாயிலாக உண்மை ஞானத்தை அடைதல். இந்த அறிவு சார்ந்த வழிமுறையில் உள்ள குறைபாடுகளில் ஒன்று ஆன்மாவிற்கு தன்னையே உணர்ந்தறிவதற்கு இது மிகவும் மெதுவான செயல்முறையாகும். இது அதிக காலத்தை எடுத்துக்கொள்ள நேரலாம். பரம்பொருளின் பேரமைதியானது, எண்ணம் மற்றும் உடல் உணர்வுக்கு அப்பார்ப்பட்ட ஒன்றாகும். இருப்பினும் இது ஒருமுறை அடையப்பட்டுவிட்டால் அவற்றினுள் வழிந்தோடுகிறது.”

## 2.பக்தி சார்ந்த வழிமுறை

“பக்தி சார்ந்த வழிமுறையின்கீழ் பிரார்த்தனை போன்ற வழிபாட்டின் அனைத்து வடிவங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆன்மாவானது, தனது கவனத்தை ஒருமுகப்படுத்துவதற்காக, தான் தேர்ந்தெடுக்கும் எதன் மீதும் அதாவது, ஓர் உருவமுள்ள இறைவன்மீதோ அல்லது உருவமற்ற சர்வ வியாபகத் தன்மை பற்றிய சிந்தனையின்மீதோ ஆழமாகவும் பக்தியுடனும் நிலை நிறுத்த வேண்டும். முக்கியமான விஷயம் என்வென்றால், பக்தன், பக்தி பூர்வமான ஒரு சிந்தனையின்மீது மனமார்ந்து ஒருமுகப்படவேண்டும். இந்த செயல்முறையின் மூலம் ஆன்மா படிப்படியாக அநேக எண்ணங்களின் தொந்தரவுகளிலிருந்து விடுபட்டதாய், தன்னுள்ளேயே தன்னைப்பற்றி சிந்திப்பதற்கு நேரமும் வாய்ப்பும் கிடைக்கப்பெறுகின்றது.

நாம் உளமார பிரார்த்தனை செய்யும்பொழுது உடல் சார்ந்த அனைத்து உணர்வுகளையும் மறந்து நமது கவனத்தைக் கவர முயற்சி செய்கின்ற அனைத்து குறுக்கிடும் எண்ணங்களையும் விரட்டியடிக்கிறோம். நமது பிரார்த்தனை எவ்வளவு ஆழ்ந்திருக்கிறதோ, அந்த அளவிற்கு உணரப்படுகின்ற மனநிறைவும் ஆழ்ந்து இருக்கின்றது. மேலும் நாம் எவ்வளவு தூரம் பேரானந்த இறைவனை அணுகியிருக்கிறோம் என்பதை நாம் அளப்பதற்கு இது ஓர் அளவுமுறையாகின்றது. உடல் உணர்வுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு சுற்றித்திரியும் எண்ணங்கள் தடுக்கப்

65
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

பட்டதால், முந்தைய வழிமுறையைவிட இதன் மிக உயர்ந்த நிலை வெளிப்படுகிறது. எனினும் இந்த வழிமுறை சில குறைகள் மற்றும் இன்னல்களைத் தோற்றுவிக்கிறது. உடலுடனான ஆழவேரூன்றிய இந்தத் தீயப் பழக்கத்துடன் ஆன்மாவின் நீண்ட காலமாகத் தொடருகிற பற்றுதல் மற்றும் அடிமைத்தனத்தின் காரணமாக, இது உடல் மற்றும் மனரீதியான உணர்ச்சிகள் எனும் எல்லையிலிருந்து தனது கவனத்தைத் திருப்பப் பயனின்றி முயற்சி செய்கிறது.”

குருதேவர் மேலும் கூறுகிறார்: “எவ்வளவு அதிகமாக ஒருவர் தனது முழு இதயத்துடன் பிரார்த்தனை செய்யவோ அல்லது ஏதாவது வழிபடும் முறையில் ஈடுபடவோ விருப்பம் கொண்டாலும் திடீரென்று தாக்குகின்ற உடல் உணர்ச்சிகளாலும், நினைவலைகள் ஏற்படுகின்ற தோன்றி மறையும் எண்ணங்களாலும், இரக்கமின்றி அவரது கவனம் ஆக்கிரமிக்கப்படுகின்றது.

நமது அனைத்து உணர்வுபூர்வமான முயற்சிகளையும் தாண்டி நமது இரண்டாவது இயல்பாக ஆகிவிட்டிருக்கின்ற தீய பழக்கமானது, ஆன்மாவின் விருப்பங்களை ஆளுகிறது. நமது விருப்பத்தையும் தாண்டி, மனம் அமைதியற்றதாகிவிடுகிறது.

மேலும், மேற்கோள் காட்டுவதனால், “உங்கள் மனம் எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் உங்கள் இதயமும்கூட இருக்கும்”. நமது உள மார இறைவனைப் பிரார்த்திக்குமாறு நாம் அறிவுறுத்தப்படுகிறோம். மாறாக நாம் பிரார்த்தனை செய்யும் பொழுது பெரும்பாலும் இலக்கின்றித் திரியும் எண்ணங்களாலும், புலனுணர்வு பதிவுகளாலும் நமது மனங்களும் இதயங்களும் திசைதிருப்பப்பட்டிருக்கின்றன,” என்கிறார் குருதேவர்.

தியான வழிமுறை மற்றும் விஞ்ஞான வழி முறை அடுத்துவரும் கட்டுரையில் குறிப்பிடஉள்ளேன். அறிவு சார்ந்த வழிமுறையைவிட பக்திசார்ந்த வழிமுறை சிறந்த்து. பக்தி சார்ந்த வழிமுறைபற்றிய ஓர் உதாரணத்தை இங்கு நான் கூற விரும்புகிறேன். இது பல ஆண்டுகளுக்கு முன்னர் கேரள மாநிலத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவமாகிறது.

## பூந்தானமும் மேல்பத்தூர் நாராயண பட்டதிரியும்

பக்தியும் விபக்தியும் (இலக்கணம்) என்ற அற்புத லீலை.

பூந்தானம், பட்டதிரி இருவரும் ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களான கவிஞர்கள். பூந்தானம் பாடியுள்ள ‘ஞானப்பானா’ கவிதைகளை ஒன்று சேர்த்து ஒரு நூலாக்கி, அதை சரி பார்ப்பதற்காக, ஸ்ரீ கிருஷ்ண பக்தனும், இலக்கணத்தில் மிகப்பெரிய பண்டிதனுமாகிய மேல்பத்தூர் நாராயண பட்டதிரியைப் பார்ப்பதற்கு தீர்மானித்தார். மேல்பத்தூர் தன்னுடைய ‘நாராயணீயம்’ என்ற பெயருடைய கவிதை எழுதி முடித்துவிட்ட நேரம். ஒருநாள் பட்டதிரி இறை நாமத்தை உச்சரித்தவாறு குருவாயூரப்பனை வலம் வருகின்ற நேரத்தில், பூந்தானம் தன்னுடைய ‘ஞானப்பானா’ என்ற நூலினை அக்கிளில் வைத்துக்கொண்டு மிகப் பணிவுடனும் பக்தியுடனும் பட்டதிரியின் பின்னாலேயே நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், பட்டதிரி திரும்பிப் பார்த்தார். அப்பொழுது மிகவும் பணிவுடன் பூந்தானம் கூறினார்;

“பண்டிதனும் பக்தியின் சிகரமும் மனிதர்களில் சிரேஷ்டனும் ஆனவரே, நான் ஒரு கோரிக்கையுடன் தங்களின் பின்னால் நடக்கின்றேன். தங்களின் நேரத்தை எதிர்பார்த்து, குறைந்த அறிவுடையவனான நான் எழுதியுள்ள இந்தக் கவிதையை தாங்கள் ஒருமுறை சரிபார்த்துத் தந்தால் நன்றாகயிருக்கும் என்பதுதான் என் கோரிக்கை. அனைத்தும் அறிந்த மகாத்மாவான தாங்கள் இந்தக் கவிதையை சரிபார்த்தால் இந்தக் கவிதைக்கு அவ்வளவு மகிமையுண்டாகும்.”

இவ்வளவும் கேட்ட பட்டதிரி உடனே, தன்னுடைய முகத்தைச் சுளித்தவாறு, “பூந்தானம், என்னால் முடியாது; நெல்லும் பதரும் போல் தப்பும் தவறுமாக எழுதியுள்ள இந்தக் கவிதையை சரிபார்க்க என்னால் முடியாது. நீ வேறு யாரிடத்திலாவது காட்டி சரிபார்த்துக்கொள். அதுவும் ஒரு பண்டிதனல்லாத உன்னால் எழுதப்பட்ட கவிதையை என்னால் பார்க்கவே முடியாது” என்று மிகுந்த கோபத்துடன் கூறினார். பட்டதிரியின் இந்த வார்த்தைகளைக் கேட்ட பூந்தானம் அசைவின்றி நின்றார். அவரு டைய மனதில் நெருப்பு பற்றி எரிவதுபோல்இருந்ததாகவும். ஐம்புலன்களும் நின்றுவிட்டது போலிருந்ததாகவும் பூந்தானம் உணர்ந்தார். “கிருஷ்ணா, கிருஷ்ணா” என்று எப்பொழுதும் உருவிட்டுக்கொண்டிருக்கின்ற அவருடைய மனம் வேதனையால் உருக ஆரம்பித்தது.

அவர் வேதனையால் இதயத்தின் அடித்தட்டிலிருந்து ‘கிருஷ்ணா’ என்று உச்சரித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டுச் சென்றார். அவர் தன்னுடைய இல்லத்திற்குச் செள்று தேம்பித் தேம்பி அழுது கொண்டும் கிருஷ்ணனை அழைத்துக் கொண்டும்; கிருஷ்ணனின் கருணை தனக்கு சிறிதளவுகூட இல்லையே என்றும் புலம்பி வேதனைப்பட்டவாறு அதே இடத்தில் கவிழ்ந்து படுத்தார். அந்தி நேரமாகிவிட்டது அவர் படுத்த படுக்கையிலேயே சந்தியா வந்தனங்களெல்லாம் மனதால் செய்தார். ‘கிருஷ்ணா, கிருஷ்ணா’ என்றழைத்தவாறு, அவனுடைய சிந்தனையிலேயே அவர் படுத்திருந்தார்.

பூந்தானம் சென்றபிறகு பட்டதிரி சந்தியா வந்தனத்திற்கு ஆயத்தமானார். அவர் ஒரு பலகையில் உட்கார்ந்தார். அவர் தன்னுடைய நாராயணீயம் என்ற மகத்தான நூலை படிப்பதற்காக எடுத்து திறந்து வைத்தார். எதிரில் யார் வருவதென்பது



தெரியாது. அவ்வளவு இருள் வியாபிக்கத் தொடங்கியது. அப்பொழுது ஜபமாலை, கமண்டலம், தண்டம், கௌபீனம் ஆகியவைகளுடன் மிகச்சிறு வயதுள்ள ஒரு பிரம்மச்சாரி வந்தார். பட்டதிரி திரும்பிப் பார்த்தார். அவரிடத்தில் பட்டதிரி, “குழந்தாய், நீ இந்த நேரம் இங்கு வந்தது நல்லது. என்னுடைய கவிதையான நாராயணீயம் படிக்கப்போகிறேன்.

இதன் பொருள் அறிவதற்கான சாமானிய பாண்டித்தியம் உனக்கு இருக்கும் என்று நான் நினைக்கிறேன். என்னுடைய மகத்தான இந்தக் கவிதையை செவிமடுத்து பக்தியில் திளைப்பாய். மற்றவையெல்லாம் பின்னர் பேசலாம்.” என்று கூறி, வந்தவரை ஒரு பலகையில் உட்காரவைத்தார். “ஓ, அப்படியே ஆகட்டும்” என்று பிரம்மச்சாரியும் கூறினார்.

பட்டதிரி, “ஸாந்த்ரானந்தாவ.........” என்ற முதல் ஸ்லோகம் படித்துவிட்டு, “என்ன குழந்தாய்! கவிதை எப்படியிருக்கிறது" என்று கேட்டார். “ஹே, பிராம்மணச்ரேஷ்டா! பக்திரசப் பிரதானமான நல்ல கவிதைதான், இலக்கணத்தின் அடித்தட்டிற்கு ஆழ்ந்து செல்கிறது. ஆனால் மூன்றாம் பாதத்தில் பயன்படுத்தியுள்ள இலக்கணம் முறைப்படி இல்லை; மிகப் பெரிய தவறாக உள்ளது. பண்டிதலோகம் இதை ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. எல்லாம் பரம அபத்தம்,” என்று பிரம்மச்சாரி கூறினார்.

பட்டதிரி அதைக்கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தார். “ஸ்ரீமன் நாராயணன்கூட என்னுடைய கவிதையில் குற்றம் உள்ளது என்று கூறமாட்டார். ஆனால் இந்த பிரம்மச்சாரி கூறுவதில்உண்மை உண்டு என்று நினைக்கிறேன். அதை நினைக்கும்போது என் மனம் தளர்கிறது" என்று எண்ணிக் கொண்டு அடுத்த ஸ்லோகம் படித்தார். அதற்கு பிரம்மச்சாரிக்குழந்தை, சிரித்துக் கொண்டு, “ ஹே பட்டதிரி, மிகவும் மோசம்! இதில் 2ம் பாதம் மிகவும் தவறு. இலக்கணத்தை சிரத்தையுடன் பட்டதிரி பார்க்கவில்லை என்று நான் நினைக்கிறேன்” என்று கூறிய பின்னர், எங்கே எப்படி இலக்கணத்தவறு இருக்கிறது என்றும் கூறினார். இவ்வாறு அவர் பத்து ஸ்லோகங்கள் படித்தார். அவை அனைத்திலும் மிகப்பெரிய இலக்கணத்தவறு இருப்பதை பிரம்மச்சாரி சுட்டிக்காட்டினார்.

“யாருமே குறைகூற இயலாதவாறானஎன்னுடைய கவிதைக்கு இந்தக் குழந்தை குறை கண்டு பிடித்தார் என்றால் இந்தக் குழந்தை யாராக இருக்க வேண்டும்.! என்னை சோதிப்பதற்காக எனக்குள் ஒளிந்திருக்கும் அகங்காரத்தை அழிப் பதற்காக வந்தவர்தான் இவர் என்றெண்ணி, எழுந்து நின்று அக்குழந்தை வடிவில் வந்தவரை கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்.” அப்பொழுது, மயில் இறகு சொருகிய தலை முடிக்கட்டுடன், கண்ணாடி போன்று ஒளிர்கின்ற கன்னங்களுடன், முத்துமாலைகளும்வனமாலைகளும் அணிந்தவாறு அழகிய மேனியுடன்கூடிய சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண ஸ்வரூ பத்தைக் கண்டார். உடனே பட்டதிரி கிருஷ்ணனை துதித்துப் பாடலானார். அதன் பின்னர் பகவான் கிருஷ்ணன் அருளினார்: “தாங்கள் மிகப் பெரிய பண்டிதனும் ஞானியுமாவீர்! தங்களை நான் மிகவும் விரும்புகிறேன். இவ்வாறான குணங்கள் இருக்கிறது என்ற அகங்காரத்தால் சாதுவும் பக்த சிரோமணியுமாகிய பூந்தானத்தின் மனதை தாங்கள் வேதனைப்படுத்தினீர்கள். இச்செயல் யதார்த்தத்தில் ஒரு கொலை செய்ததற்குச் சமம். அதை என்னால் ஒருக்காலும் சகித்துக்கொள்ள (தாங்கிக்கொள்ள) இயலாது. நான் பக்ததாசன் என்று தாங்களே ஒப்புக்கொண்டவர் தானே! என்னில் பரம பக்தனாகிய பூந்தானத்திற்கு தாங்கள் நிமித்தம் துக்கம் ஏற்பட்டுள்ளதால் அவருடைய வேதனையை உடனே தீர்த்துத்தரவேண்டும். பூந்தானமும் நானும் ஒன்றுதான். தங்களின் விபக்தியையும் (இலக்கணம்) பூந்தானத்தின் பக்தியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எனக்கு மிகவும் பிரியமானது பூந்தானத்தின் பக்தி மட்டும்தான், எனவே மிகவும் வேகமாகச் சென்று பூந்தானத்தை திருப்திப்படுத்துங்கள்! அப்படிச் செய்தால் தங்களின் கவிதையிலுள்ள குற்றங்கள் அனைத்தும் தானாகவே மறைந்துவிடும். தாங்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்தான். வேறு எதுவும் சொல்வதற்கில்லை” என்று கூறி ஸ்ரீ கிருஷ்ணன்மறைந்தார்.

அதன்பின்னர், பட்டதிரி, பூந்தானத்திடம்சென்று தன் தவறை அவரிடம் கூறி அவரிடத்தில் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். அவருடைய கவிதையை சரி

பார்த்துத்தந்தார். அதுமட்டுமல்ல, “தங்களின் கவிதை என்றென்றும் ஒளிரக்கூடியதும் காலத்தை வெல்லக்கூடியதுமானது” என்று மிகவும் அன்புடனும் பணிவுடனும் கூறி பூந்தானத்தை மகிழ்வித்தார்.

இதன் கருத்தைக்கூறப்போனால், இருவரும் ஸ்ரீ கிருஷ்ண பக்தர்கள்தான். பகவான் இருவரையும் சமமாக நேசித்தார். ஆனால் பூந்தானத்தின்இதயம் களங்கமற்ற, நிபந்தனையற்ற பக்தியால் நிறைந்திருந்தது. அதே பக்திதான் பட்டதிரிக்கும் இருந்தது. என்றாலும், அதில் அகங்காரம் கலந்திருந்தது. பட்டதிரியின் அகந்தையை பூந்தானத்தின் கவிதை மூலம் அழித்தார். அவருடைய அகந்தையை அழிப்பதற்காகத்தான் பூந்தானத்தை ‘ஞானப்பானா’ கவிதையுடன் ஸ்ரீ கிருஷ்ணன் பட்டதிரியிடம் அனுப்பி வைத்தார். ‘ அவனன்றி ஓர் அணுவும் அசையாது’ அல்லவா, இறைவன் தலையிட்டால் அனைத்தும் மங்களம். அகங்காரம் என்ற அழுக்கு யாருக்கு இருந்தாலும் அதை அழித்தால் தான் இறைவனை அடையமுடியும் என்பதற்கு இது ஓர் உதாரணம். “ நானும் பூந்தானமும் ஒன்று” என்னும் பூந்தானத்தின் மனதை வேதனைப்படுத்தியது உண்மையில் கொலை செய்ததற்கு சமம், என்னால் இதை ஒருக்காலும் சகித்துக்கொள்ள முடியாது”என்று கூறியதும் இறைவன் ஒரு பக்தனிடத்தில் எவ்வளவு பேரன்பு வைத்திருக்கிறான் என்ற அள வைக் குறிப்பிட்டுள்ளது. இறைவனிடத்தில் யார் தன் அன்பை தாமாகவே கொடுத்து, அவனுக்கு முன்னுரிமை கொடுத்து தம் இதயத்தில் முழுமையாக இறைவனுக்கு இடம் ஒதுக்கீடு செய்கின்றானோ அவனிடத்தில் மேலே கூறியுள்ளவாறு பூந்தானமும் பட்டதிரியும் ஸ்ரீ கிருஷ்ணனும் போல்பேரன்புவைத்திருப்பான் இறைவன். அந்த அன்பை அளக்கமுடியாது.

இதுபோன்ற தீவிர பக்தர்களை யார் தேவையற்ற முறையில் தொட்டாலும் சரி,வேதனைப்படுத்தினாலும் சரி, அது இறைவனைச் சென்றடைகிறது; அது இறைவனை நேரடியாக வேதனைப்படுத்துவதற்குச் சமம். அது பெரிய பாவம் என்பது அனைவருக்கும் தெரியும். இதுபோன்ற நிகழ்வுகள் எல்லா காலங்களிலும் எல்லா யுகங்களிலும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. உண்மை யான பக்தி விலை மதிப்பற்றது அது இறை தரிசனத்தைத் தரச்செய்கிறது. இவ்வுலகில் தீவிர பக்தர்கள் இருக்கும்வரை இதுபோன்ற நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும். பக்திமார்க்கம் உருவமுள்ள இறைவழிபாட்டிற்கு உகந்தது, சிறந்தது.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

# அத்தி விருட்ச மஹாலட்சுமி தேவி

காஞ்சி அத்திவரதர் வைபவம் தற்போது வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இதைப்போன்று அத்தி மரத்தால் செய்யப்பட்ட அம்மன் சிலையும் சற்று வித்தியாசமான பூஜைகள் நடைபெற்று வருகிறது.

காஞ்சி மாவட்ட கிழக்கு எல்லையில் குன்றத்தூர் முருகன் கோயில் அருகில், திருநீர்மலை சாலையில் உள்ள காத்யாயனி கோயில் வளாகத்தில் அமைந்துள்ள அஷ்டலட்சுமி கோபுர கருவறையில் அத்தி விருட்ச மஹாலட்சுமி தேவி அருள் தருகிறாள்.



பௌர்ணமி அன்று மட்டுமே காலை 8 மணி முதல் 12 மணி வரை மாலை 5மணி முதல் இரவு 8மணி வரை விசேட தரிசன சேவை உண்டு.

சாரதா நவராத்ரி 9 நாட்களும் விசேட அலங்காரத்தில் அத்தி விருட்ச மஹாலட்சுமி பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறாள்.

ஆறு பௌர்ணமிக்கு நெய் தீபம் ஏற்றி குபேர வாசல் துதி படித்து வழிபட கடன் தீர்ந்து செல்வ பேறு உண்டாகும் என்கிறது ஆலய தரிசன விதி.

அத்திவரதர் 40 வருடத்திற்கு அனந்த சரஸ் குளத்தில் பள்ளிக்கொள்ளதைப் போன்று, இந்த அத்திமரத்தால் செய்யப்பட்ட மகாலட்சுமி விஷேம் முடிந்ததும், ஆலயத்தின் பிருந்தாவன வில்வ மரத்தின் கீழ் வைக்கப்படுவார்.

– K.குமாரசிவாச்சாரியார்.
குன்றத்தூர். Ph.9176539026





# ஒவ்வொரு கிரகங்களும் கிரகங்களுக்குரிய கோயில்களும்

குரு பெயர்ச்சி வந்துவிட்டால், அனைவரும் ஆலங்குடி ஸ்தலத்துக்கு போய், வழிபாடு செய்கின்றனர். அது சிவன் யோக நிலையில், தட்சிணாமூர்த்தியாக, கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து, சின் முத்திரையோடு, சீடர்களுக்கு உபதேசம் செய்வதை உணர்த்தும் இடம்.

நவக்கிரக குருவானவர், பிரகஸ்பதி என்னும் தேவ குரு. இந்த குருவின் உண்மை யான வழிபாட்டு/ பரிகார ஸ்தலங்கள்

**குரு:**

1. தென்குடித்திட்டை.
2. திருச்செந்தூர்.
3. பாடி, சென்னை.

**சூரியன்:**

1. சூரியனார் கோவில்.
2. சக்கரபாணி கோயில் (பாஸ்கர க்ஷேத்திரம்) குடந்தை.

**சந்திரன்:**

1. திங்களூர்.
2. திருமாந்துறை, ஆடுதுறை அருகில்.

**அங்காரகன்(எ) செவ்வாய்:**

1. வைத்தீஸ்வரன் கோயில்.
2. முருகனின் அறுபடை வீடுகள்.

**புதன்:**

1. திருவெண்காடு.
2. திருப்பதி.

**சுக்கிரன்:**

1. ஸ்ரீ ரங்கம்.
2. கஞ்சனூர் ராஜ நாராயணர் கோயில், தரிசனம் செய்து விட்டு அக்னீஸ்வரர் / கற்பகாம்பாள் கோவில் தரிசனம். (முதலில் ஸ்ரீ ராஜநாராயணர்/ கோதண்ட ராமரை தரிசித்து விட்டு பின் அக்னீஸ்வரர் கோவில் சென்று சுக்கிரன் சன்னதியில் பரிகாரம் செய்தால் தான், பரிகாரம் முழுமையாக பூர்த்தியடையும்.

**ஸ்ரீ சனைஸ்சரர்:**

1. திருநள்ளாறு.
2. குச்சனூர்.

**ராகு பகவான்:**

1. திருநாகேஸ்வரம்
2. திருப்பாம்புரம்
3. பேரையூர், புதுகை அருகில்.

**கேது பகவான்:**

1. கீழப்பெரும்பள்ளம்.
2. திருப்பாம்புரம்.
3. பிள்ளையார்பட்டி.

**நாக தோஷ நிவர்த்தி:**

1. திருப்பாம்புரம்.
2. திருக்காளத்தி.
3. பேரையூர்.
4. நாகேஸ்வரன் கோவில், குடந்தை.

– ஜோதிடர் கணேஷ் மஹராஜ்
போன்: 09626338198






ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# முதுமை, இளமைக்கால முழுமைகள் ஒவ்வொரு மனிதனின் மூளைக்கும் வேண்டும்

❖ முதல் வேகமான இளமைக்காலம் மிகவும் அழகு வாய்ந்தது. அது கோடை வாசஸ்தல மலை உச்சிப் பகுதிகளில் பெய்கின்ற மழைக்கும் குற்றாலத்துத் தூறல்களுக்கும் சமமானது. இது முதற்கட்ட காலம். மத்திய தர இரண்டாவது கட்டகாலம் சரியான இளமை முறுக்கின் வேகம். இதிலே யோசிக்கின்ற சற்றே பழுத்த தன்மை நமக்கு கிடைக்கும். ஆயினும் முதுமைக்கால நிலைகளும் இளமைக்கால முழுமைகளும் ஒவ்வொரு மனிதனின் மூளைக்கும் வேண்டும்.



இது பார்வைக்கு எப்படிப்பட்டது தெரியுமா? விதை இல்லா அழகான சிவந்த மேல்நாட்டு திராக்ஷை குளிர்ந்த சாப்பாடு என்ற ஐஸ்கிரீமின் மத்தியப் பகுதியிலே உள்ளதைப் போன்றதே.

❖ பனிக்கூட்டிப் பிரதேசங் களில் ஒரு அற்புத விளையாட்டு கால்க ளால் சறுக்கும் விளையாட்டாக இருக்கிறது. இதை விளையாடுபவனின் தீர்மானச்சக்தி அந்த விளையாட்டுக்காரனின் சம நிலை ஆகும். ஒரு பாலும் கோடாத அல்லது எப்பக்கமும் சாயாத அற்புத சமநிலையே அவ் விளையாட்டு வீரனின் அழகாகும். அதுவே பலமாகவும் தெளிகிறது

❖ இளமையைக் கொண்டு இளைஞர்கள் வாழ்க்கையில் செய் கின்ற பயிற்சிகள் இந்த பனிக்கட்டி சறுக்கு ஆட்டத்தைப் போன்றது. ஆயினும் அச்சமயத்தில் இடறி விழுந்துவிடாதீர்கள். விழுந்தால் அதுவே உயிரின் வீழ்ச்சிக்கு காரணமாகும்.

❖ ஒரு தினசரி குடிகாரனால் எப்பொழுதும் சமநிலை மனதோடு அவனால் மனது வரை இருக்கவே முடியாது. இப்படி இருக்கும் பொழுது இப்படி இருக்கப்பட்டவர்கள் எப்படி பிறரது ஒழுக்கத்தையும் நமது நாட்டையும் குறையைச் சுட்டிக்காட்டி அடிக்கடி அலசிப் பேசுகிறார்கள்? இது எனக்கே புரியவில்லை. அதனால் குடிக்காதீர்கள். இச்செய்கை அசோகரின் ஸ்தூபியை விட உறுதியானது.

❖ ஓரிரண்டு வாய் என்ற அளவில் நான் சிறிதளவே தினமும் குடிக்கிறேன் என்ற தன்மை அதை அந்த வண்ணம் விளக்குவதும் பேசுவதும் உனக்கு நன்மையையே செய்யாது. மேலே செய்ததைப் போன்று மிகச்சிறிய அளவில் சிந்தித்தாலே அது மிகக்குறைவாக கெடுவதைக் காட்டிலும் நல்லதல்லவா? ஒரு சிறிதளவு மதுபானம் விழுங்கும் இடத்தில் ஒரு சிறிதளவு சிந்தனை பெரிய வாழ்க்கையைத் தரும். இந்த உபதேசம் சொர்க்கத்திற்கு சமமானது.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# குலதெய்வம்

நான் எனது குலதெய்வ நாமஜபத்தைக் காட்டிலும் எனது இஷ்ட தெய்வத்தின் நாமஜபத்தை செய்ய விரும்புகிறேன் அது சரிதானா ?

ஆம், இஷ்ட தெய்வத்தின் நாமஜபம் செய்வதில் தவறேதும் இல்லை. ஆனால் ஒருவர் அவரது குலதெய்வத்தின் நாமஜபத்தையோ அல்லது அவர் சார்ந்துள்ள மதத்தின் தெய்வீக தத்துவத்தையோ ஜபிப்பது அவரது ஆன்மீக முன்னேற்றம் விரைந்து நடக்க உதவும்.

இதற்கான காரணங்கள் பின்வருமாறு:

### 1. நமது ஆன்மீக வளர்ச்சிக்கு அதிக அனு கூலமாய் இருப்பது



ஆன்மீக சாஸ்திரப்படி எந்த மதம் நமது ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்குமோ அதில்தான் நாம் பிறந்துள்ளோம். நாம் எந்த குடும்பத்தில் பிறந்துள்ளோமோ அந்த குடும்பத்தின் குலதெய்வமே நமது ஆன்மீக வளர்ச்சிக்கும் அதிகம் உதவக்கூடியதாக இருக்கும். இறைவனின் எல்லா அம்சங்களிலும் ஒருவரது குலதெய்வமே அக்குடும்பத்தினர் அனைவருக்கும் அதிக நெருக்கமான, அக்குடும்பத்தினரின் ஆன்மீக வளர்ச்சிக்காக அணுகக்கூடிய இறை அம்சமாக உள்ளது.

இறைவனின் ஐந்து முக்கியமான தத்துவங்கள்:

1. படைத்தல்
2. காத்தல்
3. அழித்தல்
4. மறைத்தல்
5. அருளல்

❍ ஆன்மீக முன்னேற்றம் என்பதன் பொருள் என்னவெனில் எல்லா இறை தத்துவங்களையும் உள்வாங்கிக் கொள்ளுதல் ஆகும். எல்லா இறை தத்துவங்களும் நமது சூட்சும தேஹத்தில் உள்வாங்கிக் கொண்டு விட்டோம் எனில் நமது ஆன்மீக பயிற்சியும் பரிபூரணமானதாகி விடும்.

❍ நமது பிறப்பினால் நாம் சார்ந்துள்ள மதத்தின் இறைவனின் நாமத்தையோ அல்லது குலதெய்வத்தின் நாமத்தையோ நாம் ஜபிப்பதால் எல்லா இறை தத்துவங்களும் நம்மால் ஈர்க்கப்பட்டு 30% ஆன்மீக முன்னேற்ற அளவை நாம் எட்டுகிறோம்.

❍ நாம் வேறு ஏதாவது ஒரு கடவுளின் நாமஜபத்தில் ஈடுபட்டால் அது அந்தக் கடவுள் எந்த இறை தத்துவத்தின் பிரதிநிதியோ அதை வலுப்படுத்துமே தவிர நமது ஒட்டு மொத்த ஆன்மீக வளர்ச்சிக்கு அந்த அளவு உதவுவதில்லை. எனவே மேற்குறிப்பிட்ட நாமஜபம் நாம் நமது பிறப்பினால் சார்ந்துள்ள மதத்தின் இறைவனின் நாமஜபத்தைப் போன்றோ அல்லது நமது குலதெய்வ நாமஜபத்தைப் போன்றோ அந்த அளவு பயனளிப்பதாக இருப்பதில்லை.

❍ ஒருவர் தனது விடாமுயற்சியினால் எல்லா இறை தத்துவங்களையும் 30% எப்போது உள் வாங்கிக் கொள்கிறாரோ அப்போது குரு தத்துவம் அவரை 100% இறை தத்துவத்தை உள்வாங்கிக் கொள்ளும் அளவிற்கு உயர்த்துகிறது.

சில சமயங்களில் சிலர் அவர்களின் குல தெய்வத்திடமோ அல்லது அவர்கள் பிறப்பினால் சார்ந்த மதத்தை சேர்ந்த இறைவனிடமோ அல்லாது மற்ற ஏதோ ஒரு தெய்வத்திடம் அளவு கடந்த பக்தியும் விசுவாசமும் வைத்திருப்பதைக் காணலாம்.

உதாரணமாக, கிறிஸ்துவர்கள் பூஜித்து வணங்குவது மாதா மேரி என்னும் பெண் தெய்வம்; ஆயினும் இந்தப் பிரிவை சேர்ந்த சிலர் புத்தரின் தெய்வீக தன்மையினால் கவரப்பட்டு அவரது நாமத்தை ஜபிக்கலாம். அதேபோல் ஒருவர் ஹிந்துவாக இருந்தால் அவரது குலதெய்வ நாமஜபத்தை விட மற்றொரு ஹிந்து கடவுளான கிருஷ்ணனின் நாமத்தை ஜபிப்பதில் விருப்பமுள்ளவராக இருக்கலாம்.

ஒருவர் ஒரு கடவுளிடம் அதிக பக்தியும் விசுவாசமும் கொண்டவராக இருப்பது அவரது முடிவடையாத முற்பிறவியின் வாசனையினால் இருக்கலாம் அல்லது அந்த குறிப்பிட்ட தெய்வத்தின் தன்மைகள், காரியங்கள் மற்றும் புகழ் ஆகியவற்றைப் பற்றி புத்தகங்களில் படித்து, கதைகளின் மூலமாக கேட்டு கவரப்பட்டதால் இருக்கலாம்.

❍ குலதெய்வ நாமஜபத்திற்கும்இஷ்ட தெய்வ நாமஜபத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை ஒரு எளிமையான உதாரணத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். நம் உடலில் வைட்டமின் ஏ குறைவாக இருந்தால் வைட்டமின் ஏ மாத்திரை உட்கொள்வதன் மூலம் அதை நிவர்த்தி செய்து கொள்ளலாம். ஆனால் எல்லா சத்துக்களும் நிறைந்த ஒரு டானிக் சாப்பிடுவதன் மூலம் நம் உடலுக்கு தேவையான எல்லா விதமான வைட்டமின்களும் தாதுக்களும் கிடைத்து விடும். இங்கு வைட்டமின் ஏ என்பது இஷ்ட தெய்வம் அல்லது நாம் மாறிய மதத்தின் கடவுளைப் போன்றது. மாறாக நம் குலதெய்வ நாமஜபம் எல்லா சத்துக்களும் நிறைந்த டானிக்கிற்கு ஈடாகும்.

### 2. குறைந்தபட்ச பாதிப்பு

இறைவனின் நாமம் மிக சக்தி வாய்ந்ததும் புனிதமானதும் ஆகும். நாம் நாமஜபம் செய்யத் துவங்கும் ஆரம்ப காலத்தில் சில சமயம் நமக்கு அசௌகரியமான நிலை தோன்றக் கூடும். நமக்கு அந்த புனிதத்தை தாங்கக் கூடிய சக்தி இல்லாமையால் லேசான தலைவலி, குமட்டல் உணர்வு போன்ற சிறு சிறு உபாதைகள் நேரக் கூடும்.

ஒருவரது குலதெய்வமோ அல்லது பிறந்த மதம் சார்ந்த தெய்வமோ இருப்பதால் மேற்கூறியவாறு தொந்தரவு ஏற்படும் வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கும். மாறாக ஒருவர் காயத்ரி போன்ற மிகவும் சக்தி வாய்ந்த அதாவது தேஜ தத்துவம் நிறைந்த மந்திரங்களை ஜபிக்கத் துவங்கினால் மேற்குறிப்பிட்ட உபாதைகள் ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

### 3. ஆன்மீக அனுபவங்கள்

❍ ஒருவர் ஆன்மீக பயிற்சி செய்யத் துவங்கும் பொழுது அவருக்கு ஆன்மீக அனுபவங்கள்கிட்டுகின்றன.

❍ மற்ற தத்துவங்களை விட பரிபூரண பூமி தத்துவம் சம்பந்தமான ஆன்மீக அனுபவங்கள் ஒருவருக்கு கிட்டும் வாய்ப்பு அதிகம். பரிபூரண பூமி தத்துவத்துடன் சம்பந்தப்பட்ட ஆன்மீக அனுபவம் என்னவென்றால் சூட்சும சுகந்தத்தை உணர்வது (உதாரணம் சந்தன மணம்). ஒருவரது குலதெய்வம் பரிபூரண பூமி தத்துவத்துடன் சம்பந்தப்பட்டதால் குலதெய்வ நாமஜபம் செய்யத் துவங்கிய சிறிது காலத்திற்குள்ளாகவே சூட்சும சுகந்தத்தை உணரும் ஆன்மீக அனு பவம் கிடைக்கிறது. இந்த அனுபவம் நமது நம்பிக்கையை வலுப்படுத்தி நம் ஆன்மீக பயிற்சியை தொடர ஊக்கத்தை அளிக்கிறது.

❍ இதற்கு மாறாக, தேஜ தத்துவம் நிறைந்த இறைவனின் தரிசனம் கிடைப்பதற்கு நீண்ட காலம் அதாவது வருடக்கணக்கில் ஆன்மீக பயிற்சி செய்ய வேண்டும். இதனால் ஒருவர் இடையிலேயே நம்பிக்கை இழந்து ஆன்மீக பயிற்சியை தொடராது விட்டுவிட நேரலாம்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

# விக்னங்கள் தீர்க்கும் விக்னேஷ்வரன் சிறப்புகள்

⌘ விநாயகர் வழிபாடு இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கை, பர்மா, கயா, ஜாவா, பாலி, இந்தோனேசியா, சீனா, நேபாளம், திபெத், துருக்கி, மெக்சிகோ, பெரு, எகிப்து, கிரேக்கம், இத்தாலி என பல நாடுகளிலும் பல நூற்றாண்டுகளாக பரவி உள்ளது.

⌘ சென்னை அடையாறில் உள்ள மத்திய கைலாசம் என்னும் கோவிலில் ஆதியந்த பிரபு விநாயகர் அமர்ந்திருக்கிறார். இவருடைய சிறப்பு ஒரு பாதி கணபதியும், மறுபாதி மாருதியும் இணைந்த ஒரு புதுமையான அமைப்பாகும். இவருக்கு நாமே ஆரத்தி எடுக்கலாம். நம் கையாலேயே இந்த கடவுளுக்கு பூஜை செய்யலாம் என்பதும் சிறப்பு.

⌘ விநாயகப் பெருமான் பெண் வடிவத்தில் சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலயப் பெருமாள் கோவிலில் காட்சி தருகிறார். இவருக்கு புடவைதான் அணிவிக்கப்படுகிறது. கணேசாயினி என்ற திருநாமத்துடன் இவர் அருள் தருகிறார்.

⌘ திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையார் உள்ளார். இவருக்கு பருத்த தொந்தியில்லை. இவர் ஒரு வலம்புரி விநாயகர். கல்லில் தோன்றிய சுயம்பு விநாயகர் ஆவார். சிற்பியின் உளியால் பொள்ளாத (செதுக்காத) பிள்ளையார் இவர். பொள்ளாத பிள்ளையார் பிற்காலத்தில் பொல்லாப் பிள்ளையார் என மாறி விட்டார்.

⌘ தும்பிக்கை இல்லாத பிள்ளையாரை நன்னிலம் பூந்தோட்டம் அருகே உள்ள இதலைப் பதியில் காணலாம். இங்கு இவர் வலது காலைத் தொங்க விட்டு இடது காலை மடித்து இடது கையை இடது கால் மீது வைத்து வலது கையைச் சற்றுச் சாய்த்து அபய கரமாக விளங்குகிறார்.

⌘ விநாயகப் பெருமான் வீணை வாசிக்கும் காட்சியை நாம் பவானியில் காணலாம்.

⌘ மும்பையில் உள்ள மோர்காம் மயூரேசுவரர் கோவிலில் நந்தி தேவரே விநாயகருக்கு வாகனமாக இருக்கிறார்.

⌘ விநாயகர் புல்லாங்குழல் வாசிக்கும் காட்சியை ஸ்ரீசைலத்தில் காணலாம்.

⌘ தேவகோட்டையில் உள்ள விநாயகர் காலில் சிலம்புடன் காட்சி தருகிறார். இவருக்கு சிலம்பணி விநாயகர் என்ற பெயர்.

⌘ கையில் பாம்பைப் பிடித்தபடி விநாயகப் பெருமான் சங்கரன் கோவிலில் காட்சி தருகிறார்.

⌘ ஆசியாவிலேயே மிகப்பெரிய விநாயகர் கோயமுத்தூரில் புலியகுளம் பகுதியில் இருக்கிறார். முந்தி விநாயகர் என்ற திருநாமத்துடன் இவர் அருள் தருகிறார். 190 டன் எடையுள்ள இவர் ஒரே கல்லால் உருவானவர். உயரம் 19.10 அடி, நீளம் 11 அடி அகலம் 10 அடி, ஏணிப்படி மூலம்தான் இவருக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது.

⌘ வேலூரில் சேண்பாக்கத்தில் 11 சுயம்பு விநாயகர்கள் எழுந்தருளியுள்ளார்கள். இவர்கள் தோன்றிய வடிவம் ஓம்கார வடிவத்தில் உள்ளது.




⌘ புதுவை அண்ணாசாலையில் புற்று மண்ணில் சுயம்புவாக தோன்றிய இந்த பிள்ளையார் பெயர் அக்கா சுவாமிகள் பிள்ளையார்.

⌘ திருப்பரங்குன்றம் குடவரைக் கோவிலில் விநாயகர் கையில் கரும்புடன் காட்சி தருகிறார்.

⌘ நரமுக விநாயகருக்கு திருக்கோவில் தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் மட்டும் தான் இருக்கிறது. அவை சிதம்பரம் (தெற்கு வீதியிலும்) திருசெங்காட்டுக்குடியும் ஆகும். நரமுகம் என்பது மனித முகத்தைக் குறிக்கும்.

⌘ ஊத்துக்குளி அருகே உள்ள அமணேசுவரர் கோவிலில் உள்ள பிள்ளையார் தன்னுடைய வாகனமான பெருச்சாளி மீது நான்கு கைகளுடன் நடனமாடுகிறார்.

⌘ ஆந்திர மாநிலம் ரேணிகுண்டாவில் ஒரே பீடத்தில் ஐந்து விநாயகர் சேர்ந்து காட்சி தருகிறார்கள்.

⌘ மயில் மீது விநாயகர்அமர்ந்திருக்கும் காட்சியை நாம் மகாராஷ்டிராவில் உள்ள மோர்காம் என்னும் ஊரில் காணலாம். இங்கு இவருடைய திருநாமம் மயூரேசர்.

⌘ யானை முகமும் புலிக்கால்களும் பெண்ணின் மார்பும் உடைய விநாயகர் வியாக்ரபாத விநாயகர் என அழைக்கப்படுவார். இவர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள நவக்கிரக மண்டபத் தூணிலும், நாகர்கோவில் அழகம்மன் கோவிலில் உள்ள தூணிலும் காட்சி தருகிறார்.

⌘ தஞ்சாவூர் சக்கரபாணி கோவிலில் விநாயகர் சங்கு சக்கரத்துடன் காட்சி தருகிறார்.

⌘ கும்பகோணம் ஸ்ரீநாகேஸ்வரசுவாமி கோவிலில் ஜீரஹர விநாயகர் என்ற திருநாமத்துடன் கணபதி கையில் குடையுடனும் தும்பிக்கையில் அமிர்த கலசத்துடனும் காட்சி தருகிறார்.

⌘ விநாயகர் தும்பிக்கை ஆழ்வார் என்ற


ஆன்மிகமலர் மெயில் புக்

திருநாமத்துடன் பெருமாள் கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார்.

⌘ கண் பார்வை கோளாறு உடையவர்கள், சுவாமி மலை முருகன் கோயிலில் உள்ள 'நேத்ர கணபதி' எனப்படும் கண்கொடுக்கும் கணபதியை வணங்குகிறார்கள்.

⌘ அரை அடி உயர விநாயகரை மருதமலை முருகன் கோயில் அடிவாரத்தில் தரிசிக் கலாம். இவர் சுயம்புவாகத் தோன்றியதால் 'தான்தோன்றி விநாயகர்' எனப்படுகிறார்.

⌘ சீனா, ஜப்பான், தாய்லாந்து, கம்போடியா, மியான்மர், மங்கோலியா, திபெத் ஆகிய நாடுகளிலுள்ள பௌத்த மக்களும் தங்கள் வணக்கத்தில் பிள்ளையாரையும் சேர்த்துக் கொண்டுள்ளனர். சீனாவில் காணப்படும் பல விநாயகர் சிலைகள் 1400 வருடங்கள் பழமை வாய்ந்தவை என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

⌘ திண்டிவனம் நெடுஞ்சாலையில் படாளம் கூட் ரோட்டில் அம்ருதபுரி என்ற ஊரில் 8 அடி உயரத்தில் பிரமாண்ட நவக்கிரக விநாயகர் உள்ளார். இவரை வழிபட்டால் அனைத்து கிரக தோஷங்களும் விலகும்.



⌘ ஈச்சனரி விநாயகருக்கு தினமும் நட்சத்திர அடிப் படையில் அலங்காரம் செய்யப்படுகிறது.

⌘ திருவாரூரில் ஆயிரம் ஆண்டு கள் பழமை வாய்ந்த சர்க்கரை பிள்ளையார் உள்ளார். திருமண தடை உள்ளவர்கள் இங்கு 108 தீபம் ஏற்றி வழிபடுவது பரிகாரமாக உள்ளது.

⌘ தஞ்சை மாவட்டம் திருப்பனந்தூரில் இருந்து சீர்காழி செல்லும் வழியில் பந்தநல்லூரில் இருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ள மரத்துறை கிராமத்தில் இரட்டை விநாயகர் உள்ளார். இந்த இரட்டை விநாயகரை வணங்கினால் விவசாயம் செழிக்கும் என்று விவசாயிகள் நம்புகிறார்கள்.

⌘ நமது மூலா தாரத்தில் உறங்கும் குண்டலினி சக்தியை விழிப்படைய செய்யும் ஆற்றல் விநாயகர் வழிபாட்டுக்கு உண்டு.

⌘ பிள்ளையார் பட்டியில் உள்ள விநாயகர் தன் ஒரு கரத்தில் சிவ லிங்கத்தை ஏந்தி இருப்பதை சிறப்பானதாக சொல்கிறார்கள்.

⌘ திருச்சி உச்சிப்பிள்ளையார் கோவில் மலையை தூரத்தில் கிழக்கு திசையில் இருந்து பார்த்தால் விநாயகர் சிலை போலவே தெரியும்.

⌘ விருத்தாசலம் பழமலைநாதர் கோவிலில் பூமிக்கு அடியில் உள்ள விநாயகர் சிலை 18 அடி ஆழத்தில் அமைந்துள்ளார்.

⌘ சேலம் மாவட்டம் ஆத்தூரில் தலையாட்டி விநாயகர் உள்ளார்.

⌘ ஆம்பூர் வேம்புலி அம்மன் ஆலயத்தில் உள்ள விநாயகருக்கு ஆண்டுதோறும் விநாயகர்சதுர்த்தி தினத்தன்று பிரமாண்ட லட்டு தயாரித்து படைப்பதை பக்தர்கள் வழக்கத்தில் வைத்துள்ளனர்.

⌘ நாகை மாவட்டம் நரிமணத்தில் உள்ள விநாயகரை தலையில் ஒரு குட்டு வைத்து விட்டே வழிபாடு செய்கிறார்கள்.

⌘ நெல்லை மாவட்டம் சீவலப் பேரியில் உள்ள இரட்டை விநாயகர்கள் இருவரும் எப்போதும் மாப்பிள்ளை கோலத்திலேயே அருள்பாலிக்கிறார்கள்.



⌘ திருவாரூர் ஆலயத்தூண் ஒன்றில் மூலதார கணபதி உள்ளார். இவரை வழிபட்டால் நமக்குள் இருக்கும் அரிய சக்திகள் வெளிப்படும் என்பது ஐதீகம்.

⌘ ஒவ்வொரு மாதமும் வரும் சதுர்த்தி தினத்தன்று 16 கன்னிப்பெண்களுக்கு ரவிக்கை துணி, வளையல், மஞ்சள், குங்குமம் கொடுத்து வன்னி மரத்தடி விநாயகரை வழிபட்டால் திருமண தடைகள் அகலும்.

⌘ நெல்லி மரத்தடியில் உள்ள விநாயகரை வழி பட்டால் பெண் குழந்தைகளிடம் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

⌘ மற்ற கடவுள்களை விட விநாயகர் பலன் களை முந்தி வந்து தருபவர் ஆவார். எனவேதான் அவரை முந்தி முந்தி விநாயகர் என்கிறார்கள்.

⌘ திண்டுக்கல் கோபால சமுத்திரகுளக் கரையில் உள்ள 108 விநாயகர் கோவிலில் ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட 32 அடி உயர விநாயகர் சிலை நிறுவப்பட்டது.

⌘ ஓம் வக்ரதுண்டாய ஹீம் என்பது தான் சட்டாட்சர மந்திரம் இந்த மந்திரத்தை உச்சரித்து விநாயகரை வணங்கினால் பகை வரை எளிதாக வென்று விடலாம்.

⌘ ராஜராஜ சோழன் சிறந்த சிவ பக்தர். இருப்பினும் அவர் விநாயகரை வணங்கத் தவறியதில்லை. தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் மேற்கு மூலையில் திருச்சுற்று மாளிகையில் உள்ள சின்ன ச்சின்ன கோவிலுக்குள் இருக்கும் விநாயகர் களை தான் அவர் வணங்கி வந்தார்.

⌘ புண்ணியத் தைத்தேடி காசி மாநக ருக்கு செல் பவர்கள் அங்குள்ள அனைத்து விதமாக ஆலய வழிபாட்டுச் சம்பிரதாயங்கள் சடங்குகளை முடித்துக்கொண்டு வரும் போது முடிவில் ஒரு சிறிய ஆலயத்தில் உள்ள டுண்டி ராஜகணபதியை வணங்கினால் தான் யாத்திரை முற்றுப் பெறுவதாக நம்புகின்றனர்.

www.aanmeegamalar.com

# நந்தி பிரதோஷகால நாயகனின் சிறப்பு

சிவலாயங்களில் நம்மை முதன்முதலாக வரவேற்பவர் நந்தியம் பெருமான் தான். சிவனின் அருள் கிடைக்க வேண்டுமானால், நந்தியைத்தான் முதலில் நாம் வணங்க வேண்டும்.

சிவபெருமானின் வாகனமாக இருப்பது வெள்ளை நிறக் காளை. இதன் சிறப்பம்சங்கள் பல இருக்கின்றன. அவற்றைப் பற்றி இந்தத் தொகுப்பில் பார்க்கலாம்.

‘ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப...’ என்னும் பாடல் புறநானூற்றின் கடவுள் வாழ்த்தாக அமைந்திருக்கிறது. ‘சிவபெருமானின் வாகனமான காளை தூய்மையான வெள்ளை நிறமும், சிறப்பு மிகு பெருமையும் கொண்டது என்பது இதன் பொருளாகும்.

மாடு என்றால் ‘செல்வம்’ என்று பொருள். நந்தி என்றால் ‘மகிழ்ச்சி’ என்று பொருள். நான்கு மறைகளையும் நந்தியம் பெருமானுக்குத் தான், ஈசன் முதன் முதலில் கூறியதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

சிவன் கோவில்களில் கருவறைக்கு எதிரில் இருக்கும் நந்தியை, ‘தர்ம விடை’ என்று அழைப்பார்கள். அழிவே இல்லாமல் எந்த காலத்திலும் நிலைத்து நிற்பது தர்மம் மட்டுமே. அந்த தர்மம் தான், இறைவனான சிவபெருமானைத் தாங்கி நிற்கிறது.

கருவறைக்கு அருகே இருக்கும் நந்தியின் குறுக்கே போவதும், வீழ்ந்து வணங்குவதும் கூடாது என்று சொல்வார்கள். ஏனெனில் நந்தியின் மூச்சுக் காற்று கருவறை சிவலிங்கம் மீது பட்டுக் கொண்டிருப்பதாக ஐதீகம். நந்தி தேவனின் மூச்சுக் காற்றைத் தான் ஈசன் சுவாசிக்கிறார். அதாகப்பட்டது.. தர்மம் தான் இறைவனின் சுவாசம்.

சிலாத முனிவருக்கு இறைவனே மகனாகப் பிறந்ததாகவும், அவரே பின்னாளில் நந்தி எம்பெருமானாக மாறியதாகவும் புராண வரலாறு கூறுகிறது.

நந்தியம்பெருமானுக்கு ருத்ரன், தூயவன், சைலாதி, மிருதங்க வாத்யப்ரியன், சிவப்ரியன், தருணாகரமூர்த்தி, வீரமூர்த்தி, தனப்ரியன், கனகப்ரியன் எனப் பல்வேறு பெயர்கள் உள்ளன..

மராட்டிய மாநிலம், நாசிக் அருகே உள்ள பஞ்சவடியில் இருக்கும் கபாலீஸ்ரவரர் மகாதேவ் கோவிலில் தான் சிவ பெருமானுக்கு எதிரே நந்திக்கு சிலை இல்லாமல் இருக்கின்றது.

தமிழ்நாட்டிலேயே கோயம்புத்தூர் மாவட்டம் நவ கரை மலையாள துர்க்கா பகவதி கோவிலில் தான் மிகப் பெரிய நந்தி உள்ளது. 31 அடி உயரமும், 41 அடி நீளமும், 21 அடி அகலும் கொண்ட நந்தி சிலை இதுவாகும். இதற்கடுத்த பெரிய அளவிலான நந்தி தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் உள்ளது. அது 12 அடி உயரமும், 20 அடி நீளமும், 8 அடி அகலமும் கொண்டதாகும்.

சிவலாயங்களில் நம்மை முதன்முதலாக வரவேற்பவர் நந்தியம்பெருமான் தான். சிவனின் அருள் கிடைக்க வேண்டுமானால், நந்தியைத்தான் முதலில் நாம் வணங்க வேண்டும்.

பிரதோஷ காலங்களில் நந்திக்கு தான் முதல் மரியாதை. நந்தியின் காதுகளில் நமது பிரச்சினைகளைச் சொன்னால், அவர் ஈசனிடம் சொல்லி, நம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார் என்பது நம்பிக்கை.

பாற்கடலைக் கடைந்த போது வாசுகி பாம்பினால் வெளியிடப்பட்ட விஷத்தை அருந்திய சிவபெருமான், நந்தியின் இரு கொம்புகளுக்கிடையே நடனமாடி விஷத்தின் வெம்மையைத் தணித்துக் கொண்டார். அதைத்தான் பிரதோஷ நாளாக வணங்கி வருகிறோம்.

பிரதோஷ பூஜையில் நந்திக்குத்தான் முதல் அபிஷேகம் நடைபெறுகிறது. பிரதோஷ காலத்தில் மகாவிஷ்ணு, பிரம்மா உள்ளிட்ட முப்பத்து முக்கோடி தேவர்களும், சிவாலயத்துக்கு வந்து விடுவதால், நந்தியை வழிபட்டால், சகல தெய்வங்களையும் வழிபாடு செய்த பலன் கிடைக்கும்.

சிவபெருமானின் வாகனமாக காளை திகழ்வதால் தான், பிரதோஷ காலத்தில் அருகம்புல்லை மாலையாகக் கட்டி அணிவித்து வணங்குகிறோம்..



**பிரதோஷ காலத்தில் மகாவிஷ்ணு, பிரம்மா உள்ளிட்ட முப்பத்து முக்கோடி தேவர்களும், சிவாலயத்துக்கு வந்து விடுவதால், நந்தியை வழிபட்டால், சகல தெய்வங்களையும் வழிபாடு செய்த பலன் கிடைக்கும்**

பிரச்சனை தீர்ந்து மகிழ்ச்சியை பெருகவைக்கும்

# சிவ வழிபாட்டு நேரமும் பலனும்

சிவன் கோயிலில் எந்த நேரத்திற்கு சென்று சிவனை வணங்கினால் உத்தமம், அங்கே எந்த காலத்தில் தியானம் செய்தால் என்ன பலன் கிடைக்கும்? என்பதைப் பற்றி பார்ப்போம்.

**திங்கள் கிழமை** வரும் அமாவாசை நாளில் ராகு காலத்தில் (காலை 7.30 முதல் 9.00 மணிக்குள்) சிவபெருமானை தரிசனம் செய்தால் மன வியாதிகள் மற்றும் குழப்பமான நம் சூழ்நிலைகள் மாறும்.

**செவ்வாய் கிழமை** அன்று வரும் எமகண்ட நேரத்தில் (காலை 9.00 முதல் 10.30) சிவ பெருமானை தரிசனம் செய்தால் கடன் தொல்லைகளில் இருந்து விடு பட முடியும்.

**புதன் கிழமை** அன்று சிவ பெருமான் கோவிலுக்கு சென்று அதிகாலை நடை திறந்தவுடன் முதல் தரிசனம் செய்ய அல்லது அபிஷேகம் செய்ய தொழில் உத்யோகம் வளர்ச்சி உயர் பதவி கிடைக்கும்.

**வியாழக் கிழமை** இரவு சுவாமியை பள்ளியறைக்கு எழுந்தருள செய்யும் நேரத்தில் (கடைசி தரிசனம்) செய்தால் இணையில்லா செல்வம் கிடைக்கும்.

**வெள்ளி** பௌர்ணமியும் சேரும் காலத்தில் (மாலை 4.30 முதல் 6.00 மணிக்குள்) சிவ பெருமானை தரிசனம் செய்தால் மஹா லக்ஷ்மி அருள் கிடைக்கும்.

**சனி கிழமை** ராகு காலத்தில் (காலை 9.00 முதல் 10.30) சிவ பெருமானை தரிசனம் செய்தால் கர்மவினைகள் கலைந்து விடும்.

**ஞாயிறு கிழமை** அன்று ராகு காலத்தில் (மாலை 4.30முதல் 6.00)சிவ பெருமானை தரிசனம் செய்தால் எதிரிகளால் ஏற்படும் துன்பங்கள் விலகி தைரியம் ஏற்படும்.

இவைகளை விட மிக மிக முக்கியம் லிங்கோத்பவ காலத்தில் சிவ பெருமானை தரிசனம் செய்தால் பிறவா நிலையினை அடையலாம்.

## சிவ ஐக்கியத்திற்கு உதவும் லிங்கோத்பவக்காலம்

திரியோதசியும் சதுர்த்தசியும் சந்திக்கும் காலத்தின் பெயர் லிங்கோத்பவ காலம் எனப்படும். அதாவது அமாவாசை/பவுர்ணமி தொடங்கி 13வது நாள் முடிந்து 14–வது நாள் தொடங்கும் காலம். இந்த இரு வேளையும் சந்திக்கும் காலம்.

தமிழில் சதுர்த்தசி என்பதை சிவராத்திரி (இரவு) என்பார்கள். இது ஒரு ஒரு வளர்பிறை அன்றும் தேய்பிறை அன்றும் வரும்.

லிங்கோத்பவ காலம் எப்பொழுது தோன்றும் என்று எந்த பஞ்சாங்கதிலும் குறிப்பிடுவது இல்லை. நாம்தான் இதனை கவனித்து லிங்கோத்பவ காலவேளையில் சிவலிங்க தரிசனம் செய்து சிவனிடம் ஜீவனை கலக்கலாம்.



திருவண்ணாமலையில் பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் சிவபெருமான் ஒளி வடிவில் காட்சி கொடுத்த நாள் சிவராத்திரி.

அப்படிச் சிவன் விஸ்வரூப தரிசனம் கொடுத்த காலம் லிங்கோத்பவ காலம்னு சொல்லப்படுகிறது.

சிவராத்திரி அன்று நள்ளிரவு கடைசி 14 நாழிகை அதாவது இரவு 11.30 முதல் நள்ளிரவு 1 மணி வரையான காலம் லிங் கோத்பவ காலம் என்றழைக்கப்படும்.

சிவனை இந்த லிங்கோத்பவ கால நேரத்தில் நாம் வழிபட்டால் நம்முடைய பாவங்கள் அனைத்தும் பஸ்பமாகும். சவுக்யமாக வாழ ஒரு வழி கிடைக்கும்.

உங்களை வழிபடுவதில் எந்த வழிபாடு உங்களுக்கு மிகவும் பிடித்தது...?'' என்று பார்வதி சிவனிடம் கேட்க, ''சந்தேகமே வேண்டாம், தேவி மகா சிவராத்திரிதான் எனக்கு மகிழ்ச்சி தரும் நாள் என சிவன் கூறினார்.

விலையுயர்ந்த பட்டாடைகள், நகைகளை, மலர்களைவிட வில்வ இலைகளால் எனக்கு அர்ச்சனை செய்வதுதான் சிறந்தது.

மகாசிவராத்திரி நாளில் இரவின் முதல் காலத்தில் பாலினாலும், இரண்டாம் பகுதியில் தயிரினாலும், மூன்றாம் பகுதியில் வெண்ணெய் அல்லது பசு நெய்யினாலும், கடைசியில் தேன் அபிஷேகம் செய்தும் என்னை குளிர்வித்து அருள் பெறலாம்'' என சிவபெருமானே பூஜை செய்யும் முறைகளை தேவியிடம் விளக்கி யிருக்கிறார்.

இந்த லிங்கோத்பவகாலம் மாசி மாதம் மஹா சிவ ராத்திரி அன்று இரவு முழுவதும் இருப்பதால் மஹா சிவ ராத்திரி அன்று மட் டும் அனைத்து உயிர்களும் இரவு முழுவது கண்விழித்து சிவபெருமானை வழிபட்டால் சிவ னிடத்தில் செல்லலாம் என்று ஆகம நூல்கள் சொல்கிறது.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




**மாதம் தோறும் இரண்டு இதழ்களாக**
**(இ-புக் வடிவில்) வெளிவரும்**
**ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்**
**இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....**

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள், மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

**30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள்**
**படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்**

**மேலும் தகவலுக்கு 8825844033 என்ற**
**வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்**